# புதுவிதி
PUTHU VITHI

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

விலை 20/=

பக்கங்கள் 24

18 மே 2019

புதுமை : 03 விதி : 153


# முள்ளிவாய்க்கால்

## ஆறாத ரணங்களின் வலி...!





வலிகளின் அனுபவங்களை கடத்துவதாக அமையட்டும் முள்ளிவாய்க்கால்



உண்மையான நல்லாட்சி எது?




இலக்கு வைக்கப்படும் பல்கலை. மாணவர்கள்



வேட்டையில் மட்டுமல்ல அன்பிலும் அலாதியானவன்

# உண்மையான நல்லாட்சி எது?



ஷெரின்

இந்த தசாப்தத்தில் ஒவ்வொரு வருடத்தின் மே மாதத்திலும் இலங்கையில் சர்ச்சைக்குள்ளாவதும், சர்வதேசம் முழுவதும் பேசப்படுவதுமான ஒரு பூமி உண்டெனில், அது முள்ளிவாய்க்கால்தான். 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கி, மே மாதம் 18 ஆம் திகதி வரைக்கும் மனிதாபிமான நடவடிக்கை எனும் பெயரில் கூட்டுப் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் குருதி சிந்திய நிலம் முள்ளிவாய்க்கால்.

முள்ளிவாய்க்கால் மனிதப் புதைகுழிகள் இன்றும்கூட முற்கம்பி வேலிகளுக்குள் அரச பாதுகாப்புப் படையினரின் காவலின் கீழ் இருப்பதைக் காண, நந்திக்கடல் களப்பைத் தாண்டி புதுக்குடியிருப்பை நோக்கிப் பயணித்தால் போதுமானது. இப்போதும் தமிழர்களின் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளை அரசாங்கம் கையகப்படுத்திக் கொண்டிருப்பது, அரச பயங்கரவாதத்தின் இன்னும் முற்று பெறா சர்வாதிகாரத்தின் பெயரிலேயே அன்றி நல்லாட்சிக்காக அல்ல.

முள்ளிவாய்க்கால் கூட்டுப் படுகொலையின் சாட்சிகளான சடலங்களின் சிதிலங்களையும்கூட புல்டோஸர்களைக் கொண்டு அழித்துவிட்டது இராணுவம். மக்கள் இருந்தார்கள் என்பதற்கு அடையாளமாக அந்நிலங்களில் கைக்குழந்தைகளின் நைந்த ஆடைகள், சிறிய பாதணிகள், தாய்மார்களின் கந்தல் சேலைத்துண்டுகள், பீங்கான் தட்டுகள், கோப்பைகள் போன்றவை ஆங்காங்கே புதையுண்டுகிடக்கின்றன.

முள்ளிவாய்க்காலில் கூட்டுப்படுகொலை செய்யப்பட்ட உயிர்களை நினைவுகூர ஒவ்வொரு மே மாதத்திலும் தமிழ் மக்கள் முனையும்போதெல்லாம், அரசாங்கத்தின் அதிகாரக் கரங்கள் அதைத் தடுத்திடக் காத்திருக்கின்றன. மகிந்த ராஜபக்சவின் சர்வாதிகார ஆட்சியின்போது ஆரம்பிக்கப்பட்ட இந்த வன்முறை இன்றுவரைக்கும் தீர்ந்தபாடில்லை.

2012 ஆம் ஆண்டு, மே மாதம் 17 ஆம் திகதி, பளை கத்தோலிக்க தேவாலயத்துக்குள் திடீரென நுழைந்த இராணுவம், இறுதி யுத்தத்தின்போது மரித்தவர்களை நினைவுகூரும் விதமான எவ்வித பூஜைகளும் நிகழ்த்தப்படக்கூடாதென அங்கிருந்த அருட்தந்தையிடம் உத்தரவிட்டது. அது, மஹிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார ஆட்சி நிகழ்ந்த காலம். அவர் தனது ராணுவத்திற்கு உத்தரவிட்டு, மரித்தவர்களை நினைவுகூரும் மனிதாபிமானத்துக்கு எதிராகக் கிளர்ந்து நின்ற நாள் அது.

இதுமாத்திரமல்லாது, 2012ஆம் ஆண்டு, ஜூலை மாதம் அவரது ஆட்சிக் காலத்தில், சிறைச்சாலைக்குள் வைத்து படுகொலை செய்யப்பட்ட அரசியல் சிறைக்கைதிகளான வவுனியா கணேஷன் நிமலரூபன், யாழ்ப்பாணம் தில்ருக்ஷான் மரியதாஸ் ஆகியோரது சடலங்களும்கூட ராஜபக்ஷ அரசாங்கத்தை அக்காலத்தில் அச்சுறுத்தின. அந்த உடல்களுக்கான இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கு அவற்றை உறவினர்களிடம் ஒப்படைக்காமல் வாரக் கணக்கில் தாமதப்படுத்தியது அரசாங்கம். இறுதியில், நீதிமன்ற உத்தரவின் பேரில் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைத்த பின்னரும்கூட இறுதிச் சடங்குகளை எவ்வாறு எளிமையாக நடத்த வேண்டும் என்று தீர்க்கமாக உத்தரவிட்டிருந்தது.

இவ்வாறாக, அக்காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தமிழர்களின் சடலங்களைக்கூடக் கண்டு பயந்தது போலத்தான் தற்போதைய நல்லாட்சி அரசாங்கமும்கூட, நீதிமன்றத்தால் விடுக்கப்பட்டிருக்கும் தடை உத்தரவைக் கையில் வைத்துக் கொண்டு யுத்தத்தில் மரித்தவர்களின் பெயர்கள் தாங்கிய கற்பதாகைகளைக் கண்டு பயந்து கொண்டிருக்கிறது. எவ்வாறாயினும், தமிழர்கள் ஒவ்வொருவரும் மஹிந்த ராஜபக்ஷவின் மோசமான சர்வாதிகார ஆட்சியைத் தோற்கடிக்கச் செய்து, தாம் கனவுகண்ட சுதந்திரமான நல்லாட்சியைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான், 2015 ஜனவரி மாதம் 8 ஆம் திகதி தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்க, தமது வாக்குகளைப் பயன்படுத்தியிருந்தார்கள்.

அதன் பலனாக 2015 ஆம் ஆண்டு மே மாதம், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில், தமிழர்களுக்கு யுத்தத்தில் மரித்த தம் சொந்தங்களை நினைவுகூர அனுமதி கிடைத்தது. 2016ஆம் ஆண்டும்கூட முள்ளிவாய்க்காலிலும் கிளிநொச்சியிலும், இன்னும் வடக்கின் பல இடங்களிலும் கிழக்கிலும், தமிழர்கள் தாம் இழந்த உறவுகளை நினைவுகூர்ந்து விளக்கேற்றி பூஜை செய்தார்கள். அதற்கு அப்போது எவ்விதத் தடையுத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. அப்பூஜைகளால் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறுகளும்கூட ஏற்படவில்லை. எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 'நல்லாட்சி'யில், இரண்டு வருடங்களுக்குப் பிறகு அந்நிலைப்பாடு தடம்புரண்டது.

இலங்கையில் யுத்தத்தின்போது கொல்லப்பட்ட தமிழர்களை நினைவுகூர்வதற்காக அவர்களது பெயர் விவரங்கள் கற்பதாகைகளில் பொறிக்கப்பட்டு, அவை முள்ளிவாய்க்கால் தேவஸ்தானத்துக்கு அண்மித்த நிலத்தில் புதைக்கப்பட்டு, மரணித்தவர்களை நினைவுகூரும் சடங்கிற்கெதிராக, தற்போதைய 'நல்லாட்சி' அரசாங்கம் நீதிமன்றத் தடையை இட்டது, 2017ஆம் ஆண்டு, மே மாதம் 17 ஆம் திகதி.

வருடத்துக்கொரு தடவை தமது உறவுகளை நினைவுகூரும் அச்சடங்கு, பயங்கரவாதக் கொண்டாட்டம் எனக் கூறியவாறு ராஜபக்ஷவின் அடிச்சுவட்டிலேயே தமது பாதங்களைப் பதித்துச் சென்று, மரித்தவர்களை நினைவுகூர்வதற்கான தடையுத்தரவை நீதிமன்றத்தினூடாகப் பெற்றுக்கொண்டது சிறிசேனாவின் அரசாங்கம். இதன்மூலமாக, 'நல்லாட்சி' எனும் பெயரில் ஒளிந்துகொண்டிருக்கும் அரசின் கோரமான நிஜ முகமும், மஹிந்தவின் மோசமான எண்ணக்கருக்களும் வெளிப்பட்டிருந்தன. இவ்வாறாக, கொல்லப்பட்ட தமது அன்புக்குரியவர்களை நினைவுகூர்வதைத் தடுக்க, நீதிமன்றத் தடையுத்தரவைப் பெற்றுக்கொண்டிருக்கும் ஓர் அரசாங்கத்திடமிருந்து எவ்விதமான நல்லாட்சியை எதிர்பார்க்க முடியும்?

முள்ளிவாய்க்காலில் படுகொலையான ஆயிரக்கணக்கான மக்களுக்கென்று 2017 ஆம் ஆண்டு வரைக்கும் ஒரு கல்லறை கூட இருக்கவில்லை. அதுவரைக்கும், மரித்தவர்களின் உறவுகள் ஒவ்வொரு வருடமும் மெழுகுத்திரி ஏற்றிவைத்து பூக்களிட்டு வழிபட்டதெல்லாம், தாமாக மனதில்வைத்துப் பூஜித்து வந்த கல்லறைகளின் முன்புதான். குரூரமான இறுதி யுத்தத்தின்போது கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான மனிதர்களில், 250 பேரை அவர்களது உறவுகளின் சாட்சிகளோடு இனம்கண்டு பெயர், முகவரி, வயது, காலமான தினம் போன்ற தகவல்களைத் திரட்டியெடுத்து, அவற்றைக் கருங்கல் பதாகைகளில் தமிழில் பொறித்து, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவிடத்துக்கு அருகிலேயே புதைக்க ஏற்பாடு செய்தது ஓர் அரச சார்பற்ற நிறுவனம். அந்த இடம், 2017 ஆம் ஆண்டு, மே மாதம் 18 ஆம் திகதி பொதுமக்களிடம் கையளிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், 17 ஆம் திகதி இரவு அதற்கான தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மரணித்தவர்களை நினைவுகூர்வது மக்களின் உரிமை என்றபோதும், நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருந்த தடையுத்தரவில் 'நாட்டின் ஒற்றுமை, தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய ஒற்றுமை' ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, காவல்துறையினரால் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட மனுவுக்கேற்ப எதிர்காலத்தில்

(19ஆம் பக்கம் பார்க்க)

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 18 மே 2019 விதி : 154



## வந்த இடத்துக்கே போய் விடுங்கள் ரிசாட்டுக்கு வீரவன்ச எச்சரிக்கை

உயிர்த்தெழுகை நாளில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகள் தொடர்பாக தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாடளுமன்றத்தில் உரையாற்றும்போது அமைச்சர் விமல் வீரவன்ச, ரிசாட் பதியுதீனிடம் இந்த நாட்டின் சட்டங்களுக்கு உட்பட்டு நீங்கள் நடக்க முடியாவிட்டால் நாட்டை விட்டு வெளியேறி எந்த நாட்டிலிருந்து வந்தீர்களோ அந்த நாட்டுக்கே போய் விடுங்கள் என எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் உரையாற்றும்போது பலஸ்தீனத்தின் தலைவர் யசீர் அரபாத்தின் சாரதிக்குப் பணம் கொடுத்தே அவரது எதிரிகள் அவரைக் கொல்ல முயற்சி மேற்கொண்டனர். இவ்வாறே முஸ்லிம் அடிப்படைவாதிகள் தௌபீக் ஜமாத் அமைப்புக்குப் பணம் கொடுத்துத் தாக்குதல்களை மேற்கொண்டிருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

இவர் விஜயனின் சொந்த இடமான பங்களாஷூக்கோ அல்லது விஜயனின் மனைவியான பாண்டிய நாட்டின் இளவரசி யின் சொந்த நாட்டுக்கோ சிங்களவர் எல்லோரும் போய் விட வேண்டும் எனக் கேட்பாரோ தெரியவில்லை.

இப்படிச் சிங்களவர் எல்லோரும் வெளியேறப்பட்டால் இவர் மட்டும் இங்கு தங்கியிருக்க முடியுமா? சிலவேளைகளில் விஜயன் வரும் முன்பே குவேனிக்குப் பிள்ளைகள் உண்டு எனவும் அவளின் வாரிசு நான்தானெனவும் அவர் சொல்லக்கூடும்.

ரிசாட் பதியுதீன் வந்த இடத்துக்கே போகும் போது போலி பாஸ்போர்ட்டுடனா செல்ல வேண்டும் என்பது பற்றி அவர் எதுவும் கூறவில்லை.

**கல்லுளிமங்கன் போற வழி காடுமேடெல்லாம் தவிடு பொடி**

# பிரதேச சபையில் உரையாற்றிய வாளேந்திய வீராங்கனை

அண்மையில் ஹிலத்துகமு பிரதேச சபையில் பொதுசன பெரமுனவைச் சேர்ந்த பெண் உறுப்பினரான ரேணுகா சஞ்சீவினி கையில் வாள் ஒன்றை ஏந்தியவாறு உரையாற்றினார். இது விடயமாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஆட்சேபனை எழுப்பியபோது அப்பெண் உறுப்பினர் தான் தனது பாதுக்காப்புக்காகவே வாள் கொண்டு வந்ததாகத் தெரிவித்தார்.

இதையடுத்து ஆளும் கட்சியினருக்கும் எதிர்க் கட்சியினருக்குமிடையே பலத்த வாக்குவாதம் எழுந்தது எனினும் ரேணுகா வாளைக் கைவிடவில்லை.

இது பற்றிக் கேள்வி எழுப்பிய ஒரு உறுப்பினர் பொதுமக்களிடமுள்ள கத்தி, வாள் போன்ற ஆயுதங்களை ஒப்படைக்கும்படி அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், இவர் மட்டும் எப்படி பகிரங்கமாக வாளை ஏந்தி உரையாற்றலாம்? என்றும் நாட்டின் சட்டங்களிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறதா? எனவும் கேட்டார்.


பிரதேச சபை உறுப்பினர் ஒரு கத்தோலிக்கரோ அல்லது முஸ்லிமோ அல்ல. அவர் ஒரு பௌத்த சிங்களவராயிருக்கும்போது எப்படி அவருக்குப் பாதுகாப்பு தேவைப்படுகிறது எனவும் கேள்வி எழுப்பப்பட்டது.

இது பற்றி ஒரு ஊடகவியலாளர் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த மஹிந்த குழுவினரின் அருளைப் பெறவே இவர் இப்படி நடந்து கொண்டிருக்கலாம் எனத் தெரிவித்தார்.

**குளத்தைக் கலக்கினால் மீன்களைப் பிடிக்கலாம்**

# இலங்கை பௌத்த - சிங்கள நாடு ஏற்காதவர்களுக்கு இடமில்லை

அண்மையில் கோட்டே மகாநாயக்கரான இந்தியான தர்மாலங்கார தேரர் இலங்கை ஒரு பௌத்த - சிங்கள நாடு என்றும் அதை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு இங்கு இடமில்லை எனவும் தன்னை சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தலைமையிலான குழுவினருக்குத் தெரிவித்தார். மேலும், அவர் இலங்கை ஒரு பௌத்த நாடு அல்லவெ‌ன எந்த ஒரு பௌத்தரோ, பௌத்தர் அல்லாதவர்களோ இதுவரை கூறவில்லை எனவும் கூறியுள்ளார்.




அண்மையில் அமைச்சர் மங்கள சமரவீர இலங்கையில் சிங்கள -பௌத்தர்கள் பெரும்பான்மையாக இருந்தபோதும் இங்கு வாழும் பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் அனைவருக்குமே இந்த நாடு சொந்தமானதெனவும், பௌத்த சிங்களவர்களுக்கு உள்ள சகல உரிமைகளும் ஏனைய அனைத்து இனங்களுக்கும் உண்டு எனவும் தெரிவித்தார். அவருக்கு பதிலடி கொடுக்கும் முகமாகவே தேரர் இந்தக் கருத்தை வெளியிட்டார் எனத் தெரிய வருகிறது.

அண்மையில் இடம்பெற்ற குண்டு தாக்குதலில் உயிரிழந்தோர் கத்தோலிக்க மக்கள். இந்த நிலையில் பௌத்த நாடு என்பதை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு இங்கு இடமில்லையென்று கூறுவதனால் இது இந்தத் தாக்குதலை நியாயப்படுத்தும் நடவடிக்கையா? என்ற கேள்வியும் எழுகிறது. இந்த தாக்குதலால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட கசப்புணர்வைப் போக்கும் வகையில் செயற்பட வேண்டிய ஒரு மதகுரு மேலும் குரோதத்தை ஏற்படுத்த முயல்வது மக்கள் மத்தியில் விசனத்தையே ஏற்படுத்துகிறது.

தமிழ் மக்கள் மீதான இன அழிப்புக் கலவரங்கள் *1958, 1967, 1983* ஆகிய காலங்களில் இடம்பெற்ற போது புத்த பிக்குகளே வீதியில் இறங்கி அவற்றை வழி நடத்தியதை மறந்து விட முடியாது.

அன்பையும், கருணையையும் போதித்த புத்தரின் பெயரால் மதகுருமாராக இருக்கும் இவர்கள் இரத்த வெறியர்களாக மாறி இனக்குரோத சிந்தனைகளை வளர்த்து வருகின்றனர்.

இனக்குரோதக் கருத்துக்களை வெளியிடும் சமூக வலைத்தளங்களை முடக்கிய அரசாங்கம் ஏன் இவர்களை கைது செய்யவில்லையென மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

**படிக்கிறது தேவாரம் இடிக்கிறது சிவன் கோயில்**

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்





































புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## கானல் நீராகும் நீதி...!

நூற்றாண்டின் மிகப்பெரிய இனவழிப்புப் போர் முடிவுக்கு வந்து இன்றுடன் ஒரு தசாப்தம் நிறைவுறுகிறது.

ஆனால்...!

உரிமை கேட்டுப் போராடியவர்களை அடக்கி விட வேண்டும் என்ற ஆதிக்க மனப்பான்மையுடன் போர் தொடுத்த சிங்கள - பௌத்த பேரினவாத அரசாங்கம் சர்வதேச போர் விதிகளுக்கு முரணாக கொத்துக் குண்டுகள், நச்சு ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதல்களை நடத்தியது. புலிகளைத் தாக்குகிறோம் எனக் கூறிக் கொண்டு, பொதுமக்களின் குடியிருப்புகள் மீதும், அவர்கள் தஞ்சமடைந்திருந்த பாடசாலைகள், மதத் தலங்கள் மீதும் தாக்குதல்களை நடத்தின. எல்லாவற்றுக்கும் உச்சமாக பாதுகாப்பு வலயங்களை அறிவித்த அரசாங்கம் பொதுமக்களை அங்கு செல்லுமாறு அறிவித்துவிட்டு, அவ்வலயங்கள் மீதும் எறிகணைத் தாக்குதல்களையும் - துப்பாக்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். சரணடைவதற்காக சென்ற மக்களையும் கொன்று குவித்திருந்தார்கள்.

போர் காலத்தில் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உணவுப் பொருட்கள், குழந்தைகளுக்கான பால்மா, மருந்துப் பொருட்கள் என்பவற்றை புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த மக்களுக்கு கிடைக்காமல் தடை விதித்த அரசாங்கம் மனித உரிமைகளை மீறியது. இதேபோல, போரின் இறுதி நாட்களில், சரணடைந்த மக்களை தாக்கியும், முட்கம்பி வேலிக்குள் அடைத்தும் துன்புறுத்தினார்கள். அவர்களுக்கு சரியான முறையில் உணவுகூடக் கொடுக்காமல் துன்புறுத்தினார்கள். விசாரணைகள் என்ற பெயரில் மக்கள் பலவிதங்களில் கொடுமைப்படுத்தப்பட்டனர்.

சரணடைந்தவர்களில் ஒரு பகுதியினரைக் கொன்றும், பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கியும் - தொடர்ந்து பாலியல் அடிமைகளாக ஆக்கியும் சரணடைந்தவர்களை சித்திரவதைகளுக்கு உள்ளாக்கியும் போர் விதிகளுடன் மனித உரிமைகளும் மீறப்பட்டன. திரும்பத் தந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையிலும் வேறு வழியில்லாமலும் தங்கள் பிள்ளைகளை, கணவனை, சகோதர, சகோதரிகளை இராணுவத்திடம் ஒப்படைத்தவர்களுக்கு இன்றுவரை அவர்கள் திரும்பக் கிடைக்கவேயில்லை. தங்கள் உறவுகளை திரும்பத் தருமாறு கேட்டு ஒரு பக்கம் போராட்டம் தொடருகையில் ஆணைக்குழுக்கள் அமைக்கிறோம் என்று ஏமாற்றங்களையே மக்களுக்கு பரிசாக வழங்கும் அரசாங்கம், காணாமல் ஆக்கப்பட்டவர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்யவும் முன்னெடுப்புகளை மேற்கொள்கிறது.

இறுதிப் போர் நடந்த மண்ணில் பெரும் இராணுவத் தளங்களை அமைத்து போர் சாட்சியம் அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. மேலும், மக்களுக்கு சொந்தமான காணிகளை தொடர்ந்தும் தமது ஆக்கிரமிப்பின் கீழேயே வைத்திருக்கவும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால் சொந்த மண்ணின் மைந்தர்கள் சொந்த நிலத்திலேயே அகதிகளாக வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

போர் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் - ஒரு தசாப்தம் நிறைவுக்கு வந்துள்ளது. ஆனால், இன்னமும் உறவுகளை - அங்கங்களை - சொத்துக்களை இழந்தவர்களுக்கு எந்த இழப்பீடும் வழங்கப்படவில்லை. போர் மீறல்கள், மனித உரிமைகளை மீறியவர்களுக்கு எதிராக எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு பொறுப்பான பதில் வழங்கப்படவில்லை. இவ்வளவும் ஏன்? அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியக்கூட ஓர் ஒழுங்கான ஆணைக்குழுகூட அமைக்கப்படவில்லை. இவற்றில் மட்டுமில்லை... சொந்த நிலங்களை மக்களிடமே மீள ஒப்படைப்பதில்கூட இன்னமும் உரிமைகள் மீறப்பட்டுக் கொண்டே உள்ளன.

இறுதிப் போர் நிறைவடைந்து ஒரு தசாப்தத்தைக் கடக்கும் போதும்கூட பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி இன்னமும் கானல் நீராகவே தெரிகிறது.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 51

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

எனது மகன் தெருவோரமாக அமர்ந்திருந்த என்மடிமீது தலையை வைத்துப் படுத்திருந்தான். அவனுடைய தலையைத் தடவியபோது கொஞ்சம் உடம்பு கொதித்து காய்ச்சலாக இருந்தது. இரவு குளித்தது அவனுக்கு ஒத்துவரவில்லை. நேரம் காலம் அவனுக்கு சரியாக இருக்க வேண்டும். நேரம் காலம் பார்த்து செயற்படும் நிலையிலா நாமிருக்கிறோம்? கொஞ்சம் நீயும் இந்த நிலைமைகளை ஏற்றுத்தான் வாழப்பழக வேண்டும் மகனே. நாம் ஜனநாயகம் நிறைந்த நாட்டிலா வாழ்கிறோம்? விரும்பியபடி செய்ய நினைத்ததை செய்யக்கூடிய நேரத்தில் செய்வதற்கு? கைப்பையில் இருந்த பனடோல் சிரப்பையும் பிரிட்டோன் சிரப்பையும் அவனுக்கு பருக்கினேன்.

கைவசமாக விசுவமடுவில் மேலதிகமாக வாங்கிய மருந்துக்கலவைகளும் முடிவதற்கு அறிகுறியாக அடியில் நின்று சிரித்தன. மருந்துப்பொருட்கள் எங்களைக் கூட்டிப்போகும் இடத்தில் கிடைக்குமா? என்னவோ நடப்பது நடக்கட்டும். விரக்தியாக இருந்தது. ஓரளவு உணவு கிடைத்ததால் தாய்ப்பாலுக்கு மகளுக்கு குறையிருக்கவில்லை. வயிறு நிறையுமளவு அவளுக்குரிய பால் கிடைத்ததால் அழுகை குறைந்திருந்தது. பால் வராத கோபத்தில் முரசால் அழுத்திக் கடிக்கும் சித்திரவதையில் இருந்து முலைக் காம்புகளுக்கு விடுதலை கிடைத்தது. பால் வராத கோபத்தில் முரசினால் அழுத்தி கடித்து கைகளால் பிராண்டி வேதனைப்படுத்திய போதெல்லாம் என் இயலாமையை நினைத்து அழுதிருக்கிறேன். பணமிருந்தும் உணவில்லாத கொடுமையை என்னென்று சொல்வது?

இந்தப் பஞ்ச நிலையைத் தந்து உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்தோர் மீது எல்லையற்ற கோபம் வந்தது. இறுதி நாட்களில் உணவுப் பொருட்கள் லொறிகளிலும் பஸ்களிலும் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

வெறும் சீனியையும் தேயிலையையும் போட்டுக் கரைத்த தேநீரைக் குடித்து உறங்கியவள் அவள். கஞ்சியில் கிடைத்த தெளிவு தண்ணீரை வடித்துப் பருக்கியபோது வஞ்சகமில்லாமல் குடித்துக் கொண்டவள் அவள். ஆனாலும் பாலுக்காகவும் அழுதாள். கடைசி நேரத்தில் கிடைத்த மாப்பெட்டிகளில் சிலவற்றை குழந்தைகளுக்காக பத்திரப்படுத்தி எடுத்து வந்ததால் தெருவோரத்தில் அடுப்பு மூட்டி அவர்களுக்கும் எமக்கும் தேநீர் தயாரானது.

இப்போது பேருந்துக்குள் இருந்தால் மட்டுமே சினக்கிறார்கள். காலை 8.30 மணியளவில் இராணுவத்தினர் வந்து பேருந்துக்குள் இருப்பவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உணவைத் தந்தனர். எங்களுக்கு கௌப்பி காலையுணவாகக் கிடைத்தது. மிளகாய், வெங்காயம் போட்டு வதக்கிய அந்த உணவின் வாசனையில் நாவூறியது. சுவையான உணவைக் கண்டு எவ்வளவு காலம்? சுவையான உணவைத் தேடும் மனிதர்களாக மாறியிருந்தோம்.

இலட்சியம், இலக்கு என்று யாராவது கதைத்தால் என்ன நிலை என யோசித்துப் பார்த்தேன். ஆபத்துச் சக்கரங்கள் கடிகாரச் சில்லுகளாக மூளையை வலம் வந்தன.
பயம் மனதை இறுக அணைத்தது. மகன் உறைப்பிட்ட அந்த உணவை விரும்பி உண்டான். காய்ச்சல் குறைந்திருந்தது. எந்தத் தாய்க்குத்தான் தன் பிள்ளைக்கு நிறைந்த உணவு கிடைத்தால் மகிழ மாட்டாள்? அவன் அளவுக்கு அதிகமாகவே சாப்பிட்டான். பசி கிடந்த சிறு உயிர்கள். எலும்பும் தோலுமாக பவனிவந்த சிறு உயிர்கள். யார் இவர்களின் மகிழ்ச்சிகரமான உலகத்தை திருடிப்போரையும் அவலத்தையும் கொடுத்தது? சிந்தனையில் சுழன்று கொண்டிருக்க விருப்பின்மையால் கொஞ்சத்தூரம் நடக்க மனம் விரும்பியது.

நடப்பது மன அழுத்தத்தை குறைக்கும். சரியான முடிவுகளை எடுக்கத்தூண்டும். போர் மண்ணிலும் நீண்டதூரம் நடந்தோம்.
அவலத்தோடும் துயரச் சுமையோடு நடந்தாலும் பாதுகாப்பு, சாப்பாடு, அடுத்தகட்ட நிலைப்பாடு தொடர்பாக நன்கு சிந்திக்க முடிந்தது. நடப்போம்... பக்கத்துப் பேருந்துகளில் யாராவது தெரிந்த முகங்களைத் தேடின கண்கள். தோழியும் நானும் இணைந்து நடந்தோம். சிலரின் கூத்துக்கள் சிரிப்பைத் தந்தன. தோழியருடன் சேர்ந்தால் நான் சற்றுக் கலகலப்பாக சிரிக்கும் இயல்புடையனான். என்னை மறந்து சிரித்து விட்டேன்.

ஒரு கரம் என்னைத்தொட்டு நிறுத்தியது. நிறுத்திய பெண்ணின் விழிகளைப்பார்த்தேன். கையைப் பிடித்தவளே வாயையும் திறந்தாள்.

" சஞ்சி மிஸ் தானே? "

'ஓம்... நீங்க ஊர்மிளா மிஸ் தானே? "

ஒருவரை ஒருவர் கட்டியணைத்து அழுதோம். எனது பிள்ளையின் இழப்பை அறிந்ததாகக் கூறினாள். ஓடிச்சென்று கடலை பை ஒன்றை எடுத்து வந்து தந்து உண்டாள்.

கறுத்து மெலிந்திருந்தாள்.
ஊர்மிளாவின் சகோதரி செஞ்சோலைக் குண்டுத் தாக்குதலில் உயிர்தப்பியவள். அவள் திருமணம் செய்திருந்தாள். குண்டுத் தாக்குதலின் பின் அடிக்கடி மயங்கி விழுவாள். வாகன இரைச்சலுக்கும் பயப்படுவாள். இயக்கம் பிடித்து விடும் என்ற அச்சத்தில் தந்தையார் திருமணம் செய்து வைத்திருந்தார். அவள் சற்று இயல்பாக இருந்தாள்.

ஊர்மிளாவின் தங்கை நன்கு படிக்கக்கூடிய திறனுடையவள். காலத்தின் கோலத்தால் இளவயதுத் திருமணம் அவளது இலட்சியங்களை தின்று விட்டது. இயக்கத்துக்கு ஆள் சேர்ப்பால் திருமணம் முடித்தோர் ஏராளமாக இருந்தார்கள். சிலர் அவசர கல்யாணமும் - அவசர விதவைகளாகவும் மாறியிருந்தார்கள்.

(சாட்சியம் நீளும்)

# வலிகளின் அனுபவங்களை கடத்துவதாக அமையட்டும் முள்ளிவாய்க்கால் நினைவுநாள்

■ தயாளன்

ஒரு பிடி கீரை 2019 இல் என்ன விலை? 30ரூபா அல்லது 40ரூபா. இதுவே பத்து வருடங்களுக்கு முன்னர் என்ன விலை இருக்கும். அன்றைய பணப்பெறுமதியில் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். ஒரு பிடிக்கீரை 2009 இல் 200 ரூபா விற்றது என்று சொன்னால் முள்ளிவாய்க்கால் வரை பயணித்தவர்களைத் தவிர எவரும் நம்ப மாட்டார்கள். காலையில் வரிசையில் நின்றே இந்த விலையில் கீரை வாங்க வேண்டும். அதுவும் ஒருவருக்கு ஒரு பிடிதான் வழங்கப்படும்.

தொடர்ச்சியான இந்த யுத்தத்துக்கு மத்தியில் நம்பிக்கையுடன் இதனைப் பயிரிட்டவரை வாழ்த்திக் கொண்டே சென்றனர் கீரையை வாங்கியோர். சில நாட்கள் மட்டுமே இந்த வாய்ப்பு கிடைத்தது. சிறிமாவின் காலத்தில் பாணுக்கு இரவிரவாகக் காத்திருந்தது போலத் தான் இந்த நிலை. தொடர்ச்சியாக தாங்கள் தங்குமிடத்துக்கு வெளியே இரவில் கீரைக்காக் காத்திருக்க குடும்பத்தினர் அனுமதிக்க மாட்டார்கள் என்பதால் அதிகாலையிலேயே தோட்டத்துக்கு விரைவர். ஒரு நடுத்தர அளவு மாங்காயின் விலையும் 200 ரூபாய்தான்.

கீரை பத்து பிடி விற்றால் தான் தோட்டக்காரன் ஒரு கிலோ சீனி வாங்க முடியும். மே 16ம் திகதி பிற்பகல் கூட பருப்பு வடை சுற்று விற்றார்கள் எம்மவர் சிலர். நாளை என்ன நடக்கும் என்பது நிச்சயமாகாத நிலையில் நம்பிக்கையுடன் சீறிச் செல்லும் ரவைகள், எறிகணைகளுக்கு மத்தியில் வடை சுட முடிகிறது என்றால்... இதற்கப்பாலும் ஒரு வாழ்க்கையுண்டு: அதை எதிர்நோக்கத் தயார் என்பதே அந்த மக்கள் கூட்டம் சொன்ன செய்தி உப்போடோ உப்பில்லாமலோ கிடைத்த கஞ்சியைக் குடித்துக் கொண்டே போரிட்டுக் கோண்டிருந்த போராளிகள் சிலர் தாங்கள் பிரவேசித்த இராணுவ முகாமின் வாசலில் உள்ள மாமரத்தில் ஏறி மாங்காய் பிடுங்கிக் கொண்டே இறங்கினர். போராட்டம் இனித் தொடராது என்று நிச்சயமாகத் தெரிந்த பின்னரே இவ்வாறான நிலைப்பாட்டை எடுக்க வேண்டியிருந்தது. சில நாட்கள் பசியுடன் இருந்தவர்கள் வேறு எதைத்தான் செய்ய முடியும்?

வன்னியில் ஏன் உணவுத் தட்டுப்பாடு என கேள்வியெழுப்புவோர் உண்டு. அதிலும் ஓரளவு நியாயம் உள்ளதுதான். வன்னியில் விளைந்த அரிசி உண்டு. கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் விற்பனை நிலையங்களில் இருந்த உணவுப் பொருட்கள், பாவ மன்னிப்புக்காக கலைஞர் அனுப்பி வைத்தவையெல்லாமே இருக்கையில் ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். மன்னார் மடுவில் ஆரம்பித்த இடப்பெயர்வு முள்ளிவாய்க்காலில் முடிவுற்றது. 16 முதல் 20 தடவைகள் இடம்பெயர்ந்தோரும் உண்டு. ஒவ்வொரு தடவையும் அடுத்த இடத்தை நோக்கிப் போகும்போது கொஞ்சக் கொஞ்ச உடைமைகளை விட்டுவிட்டே போகவேண்டியிருந்தது.

யுத்தத்தின் கோரம் அப்படியிருந்தது. அப்போதும் உணவுப் பொருட்களைக் கைவிட மாட்டார்கள். விசுவமடு வரையில் இந்த இடப்பெயர்வுகள் ஒரே வகையில் அமைந்திருந்தன. அதன் பின்னர்தான் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மிக வேகமாகச் சுருங்கியது. வீதியின் இரு மருங்கும் கைவிடப்பட்ட வாகனங்கள் நின்றன. மக்கள் ஓர் ஒழுங்கில் பயணம் செய்ய முடியாத நிலை. ஒருவாறு பயணித்துக் குடும்பத்தவரை அப்போதைக்குப் பாதுகாப்பானது எனக் கருதப்படும் இடத்தில்



விட்டுவிட்டு திரும்பிச் சென்று நெல், அரிசி போன்றவற்றை எடுத்து வரலாம் எனச் சென்றவர்களுக்கு அது சாத்தியமாகவில்லை. குறிப்பாக நெத்தலியாற்றுப் பாலத்தைத் தாண்டி நெல், அரிசி மூட்டைகளைக் கொண்டுவர முடியவில்லை.

வீட்டில், கடைகளில் விட்டுவிட்டு வந்தவை பல இலட்சம் பெறுமதியானவை. எனினும் குழந்தைகளின், பிள்ளைகளின் பாதுகாப்பே முக்கியமானது என்பதால் அவற்றைத் திரும்பச் சென்று எடுத்துவர குடும்பத்தினர் அனுமதிக்கவில்லை. இவ்வாறு சென்றோர் திரும்பி வராத செய்திகள்அவர்களைப் பயமுறுத்தின. கையில் இருந்த தேட்டங்கள் கரையத் தொடங்கின. தம்மை வருத்திப் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொண்டனர் பெற்றோர். இதேவேளை எந்த இடமும் பாதுகாப்பில்லை என்ற நிலை வந்ததும் பதுங்குகுழிகளை மூட தென்னை மரங்களை வெட்டத் தொடங்கினர். இறுதியில் தேங்காய் சேர்க்காமலேயே சமையல் நடந்ததற்கு தென்னை மரங்களின் அழிப்பு முக்கிய காரணமாயிற்று.

இடம் சுருங்கச் சுருங்க, வீதிகளால் பயணம் செய்யவே முடியாத நிலை. காவல்துறையினர் குறிப்பிட்ட கால அவகாசத்தினுள் இந்த வாகனங்களை அகற்ற வேண்டும் என எச்சரித்தும் எவராலும் எங்கும் அவற்றைக் கொண்டுபோக முடியவில்லை. காயமடைந்தோருக்கு உரிய நேரத்தில் சிகிச்சையளிக்க முடியாமல் போனதற்கு வீதிகளில் நின்ற வாகனங்களும் ஒரு காரணம்.

நாளாக நாளாக மக்களின் நாளாந்த உணவு முறையில் மாற்றம் காண வேண்டி ஏற்பட்டது. வெவ்வேறு உணவு உண்டோர் சோற்றை மட்டும் உண்ண வேண்டியிருந்தது. இரண்டு வயதுக் குழந்தைகூட காலை உணவாக பருப்பைச் சாப்பிட்டது. இறுதிவரை கிடைத்த உணவுப் பொருட்களுள் பருப்பு முக்கியமானதாக இருந்தது. இறுதியில் கஞ்சிதான். இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்தோருக்கு கஞ்சி வழங்கத் தீர்மானித்தார் கபிலம்மான் எனும் மூத்த போராளி. இதனைக் கண்ணுற்றதும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்றவையும் இம்முயற்சியில் ஈடுபட்டன. மக்களுக்கு வழங்கப்பட்ட கஞ்சியே இறுதியில் போராளிகளுக்குமானது. கஞ்சிக்காகப் போன இடத்தில்கூட எறிகணை வீச்சில் உயிரிழந்தனர் எம் உறவுகள். பால்மா கிடைக்கும் எனச் சென்ற தாய்மாரையும் எறிகணைகள் விட்டு வைக்கவில்லை.

இறுதியில் தட்டுப்பாடான பொருட்களில் உப்பும் முக்கிய இடம் வகித்தது. அதனால் உப்பில்லாக் கஞ்சியையும் குடிக்க வேண்டி வந்தது. தமிழர் விடுதலை வரலாற்றில் இது முக்கிய அம்சம். உப்பில்லாக் கஞ்சி குடித்தபோதும் ஒழுங்கைக் கடைப்பிடிக்கத் தவறவில்லை எம் மக்கள். இராணுவக் கட்டுப்பாடான முல்லைத்தீவு நகருக்குள் கால் வைத்ததுமே உணவுப் பொதி, தண்ணீர் என்பனவற்றில் சச்சரவைக் காண முடிந்தது. எப்படியாக இருந்த மக்கள் கூட்டம் இப்படியாக மாறினோம்.

• • •

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பான கூட்டமொன்றில் பிரபல அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் இஸ்ரேல் மக்கள் தொடர்பாக ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார். வேக வைக்காத இறைச்சியையும் புளிக்க வைக்காத அப்பத்தையும் இஸ்ரேல் மக்கள் உண்ண வேண்டி வந்தது. இடம்பெயர்ந்து கொண்டிருந்த காலத்தில் அவர்கள் இந்த நிலையைச் சந்தித்தார்கள். தாங்கள் சந்தித்த அவலங்களை தமது சந்ததியினருக்கு நினைவுபடுத்தி வருகின்றனர். ஆண்டுதோறும் ஒரு நாளில் இஸ்ரேலிய குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுகூடுவர். அவர்களிடம் அந்த உணவு இருக்கும். குடும்பத்தில் மிக இளவயது உறுப்பினர் முதிய உறுப்பினரிடம் 'நாம் ஏன் கூடியிருக்கிறோம்" என வினாவுவார்.

'நமது முன்னோர்கள் பட்ட வலிகளை அவர்களது சந்ததியினரான நாம் மறக்கக் கூடாது என்பதற்காகவே கூடியிருக்கிறோம். இதனை உண்கிறோம். நீங்களும் உங்கள் சந்ததியினருக்கு மறக்காமல் இதனை நினைவுபடுத்த வேண்டும். அப்போதுதான் எமது வாழ்வு எத்தகைய வலியின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது என்பது அடுத்த சந்ததியினருக்குப் புரியும்", எனக் கடந்த கால சம்பவங்களை அனைவருக்கும் விபரிப்பார் என அவர் குறிப்பிட்டார்.

நாம் கடந்து வந்த பாதையில் எண்ணற்ற சடலங்களைக் கண்டிருக்கிறோம். வட்டுவாகலில் ஒரு பாரஊர்திக்குப் பக்கத்தில் இரு சடலங்களைக் காண முடிந்தது. அதற்குப் பின்னே, சில குடும்பங்கள் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். பிரேதத்துக்கு அருகில் இருந்து சமைத்துச் சாப்பிட்டோம் என்றால் அந்தக் காட்சியைச் சிந்தித்துப் பாருங்கள்... எவ்வளவு வலி, அழுத்தங்களுடன் இவற்றைக் கடந்தோம்.

எழுதும் ஆற்றலுள்ளோர் இவ்வாறு தாங்கள் சந்தித்த அனுபவங்களைப் பதிவு செய்ய வேண்டும். எழுத முடியாதவர்கள் யாரிடமாவது சொல்லிப் பதிவு செய்ய வேண்டும். இல்லையேல் எமது நினைவு இருக்கும்வரையே இருந்துவிட்டு எல்லாமே அழிந்து போகும். எமது சந்ததி தமது முன்னோரின் வரலாற்றை, அவர்கள் பட்ட வலிகளை மறக்காமல் இருந்தால்தான் தமது வாழ்வை சிறந்த முறைமையில் கட்டமைப்பர் எனவே, மே 18 என்பது வருடாந்தச் சடங்காக இல்லாமல், வரலாற்றை மேலும் மேலும் நினைவுகூரும் வகையில் பதிவாக்கும் ஆரம்பமாக அமையட்டும்.

# மே 18 சித்தாந்தம்

■ நோக்கன்


இலேசாக அந்த நாட்களை கடக்க முடிகிறதா? உலகத்தில் செக்கன்கள் எண்ணப்படுவது ஒன்று போட்டிகளில். இரண்டாவது மரணப் படுக்கையில். ஆனால் முள்ளிவாய்க்காலில் அன்றைய தினம் செக்கன்களைக்கூடக் கூறு போட்டு எண்ண வேண்டிய வர்களாகத் தமிழர்கள் மாறிய இக்கட்டான நிலையை எமக்கு உணர்த்திவிட்டு கடந்து சென்றது மே 18. அது தந்த வலிகளும், ரணங்களும் மாறுவதற்கு இன்னும் எத்தனை தசாப்தங்கள் எடுக்குமோ? ஏக்கம்தான் எம்முள்ளே இருந்து பெருமூச்சாகி வெளிவருகிறது.

காரணம் முள்ளிவாய்க்கால் மண் எம்முன்னே பேரினவாதிகளால் எமக்கு இழைக்கப்பட்ட அநீதியின் சாட்சியாக நீண்டு பரந்து விரிந்து கிடக்கிறதே? இரண்டு கைகளையும் விரித்து இங்கெல்லாம் தமிழ் தாய் உறங்குகிறாள் என்று சொல்வதற்காகப் போராடிய மண்ணில், இன்று இரு கைகளையும் விரித்து இங்கெல்லாம் தமிழ் மக்களின் வெற்றுடல்கள் விதைக்கப் பட்டிருக்கின்றது என.... பெருமையோடு சொல்வதா? அன்றேல் வெறுமையோடு எடுத்துரைப்பதா? என்று எனக்குத் தெரியவில்லை.

முள்ளிவாய்க்கால் சம்பவம் உலகமெல்லாம் தமது உரிமை களுக்காகவும், விடுதலைக்காக வும் போராடும் மக்களுக்கு ஒரு புதிய பாடமாக இருக்கிறது. சர்வதேசப் பேரினவாதிகளின் சங்கமமாக முள்ளிவாய்கால் மண்ணில் உச்சபட்சமான அடக்குமுறையை அவர்கள் உபயோகித்து ஒரு போலியான வெற்றியை இலங்கைப் பேரினவாத அரசுக்குப் பெற்றுக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டனர். போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறோம் என்று கங்கணக் கட்டிக் கொண்டவர்கள்தான் ஐ.நா சபையிலும் அங்கத்துவதைக் கொண்டிருக்கின்றனர். போரிலே எம்மைக் கூட்டாக இணைந்து வீழ்த்தியவர்கள், ஐ.நாவிலாவது எமக்கு நீதியைப் பெற்றுத் தந்திருக்கலாம்? அதில் கூட சுய அரசியல் லாபத்தை அந்த நாடுகள் பார்த்துக் கொண்டன. என்ன விதமானாலும் இலங்கையைத் தம் வசப்படுத்துவதற்கென எண்ணிய அவர்கள் தமிழருக்கு ஒரு சமாதனமுள்ள தீர்வையா பெற்றுத்தரப் போகிறார்கள் என்ற சுய சிந்தனை கூட இல்லாமல்.... நாம் அவர்களைத் தொடர்ந்தும் நம்பிக் கொண்டிருக்கிறோம்.

அதற்கேற்றாற்போல சிறந்த அரசியல் கதை சொல்லிகளாக எமது தமிழ் அரசியல்வாதிகள் பலரும் இருக்கிறார்கள் என்பதுதான் ஆற்ற முடியாத இரணங்களாக எம்முள் வலியைத் தருகின்ற விடயம். பேரினவாதிகளுக்கு மிண்டு கொடுப்பதன் மூலம் சர்வதேசத்தைத் திருப்திப்படுத்துகின்ற பணியை முன்னெடுப்பவர்கள் எமது அரசியல்வாதிகள். அவர்கள் தமிழ் மக்களின் வாக்கைப் பெற்று நாடாளுமன்றம் சென்றவர்கள் என்ற நினைவில்லாது அரசியல் செய்து கொண்டிருப்பவர்கள். அவர்களிடமும் நீதியை ஒரு தொலைந்த விடயமாக காண்கிறோம். மக்களை ஏமாற்றுகிறோம் என்ற சுய சிந்தனை கூட அவர்களிடம் இல்லாது போய் இருக்கிறது. தமிழ் மக்களுக்குச் சாதகமாக வந்த அரசியல் திருப்பு முனைகளை எல்லாம் கை நழுவவிட்டவர்கள் நாங்கள். அப்படியான துர் அதிஷ்டத்தை எமக்கு ஏற்படுத்தித் தந்த பெருமை எமது அரசியல் வாதிகளையே சாருகிறது. ஏனெனில் எமது தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய சக்தியதாக அவர்களையே நாம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்திருந்தோம்.

இலங்கை சுதந்திரமடைந்ததாகச் சொல்லப்பட்ட 1948 களில் தொடங்கிய வேதனை இன்றும் எம்மோடு ஒட்டிக் கொண்டும் எம்மை உறங்கவிடாதும் எம்மைத் தொடர்வதற்குக் காரணம் எமது அரசியல் தலைமைகள். அவர்கள் இதுவரை எம்மைத் தவறாகவே வழி நடத்தியிருக்கிறார்கள்.




இன்றும் வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எம்மால் தந்தை என விழிக்கப்பட்டு அவருக்காக ஒரு நினைவுத் தூபியையும் கட்டி எழுப்பியிருந்தோம். ஆனால் இன்று அந்த இடத்தைக் கடக்கின்ற ஒவ்வொரு சமயமும் தந்தையின் நலனை நாம் எண்ணுவதற்குப் பதிலாக "இனி கடவுள்தான் தமிழரைக் காப்பற்ற வேண்டும்" என்று சொல்லித் தன் கையை விரித்துத் தமிழ் சமூகத்தை நடுத்தெருவில் விட்டுவிட்டுச் சென்ற மனிதரா இவர்? என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஆங்கில ஆட்சியாளர்கள் இந்தியாவுக்குச் சுதந்திரத்தை வழங்கிவிட்டு இலங்கை மக்ளுக்கு போராடாமலே தானமாகச் சுதந்திரத்தை வழங்கியிருந்தனர். அதனை இன்றுவரை எம்மால் பாதுகாக்க முடியவில்லை. பூரணமான இறைமையை எம்மால் ஏற்படுத்த முடியவில்லை. ஆனால் அந்த நாட்களில் எந்த வித போராட்டங்களும், இழப்புகளும் இல்லாது தமிழருக்கான உரிமைகளைப் பெறுவதற்குரிய அந்தஸ்தில் தமிழ் தலைவர்கள் இருந்திருக்கின்றனர். மிகவும் இலகுவாகவும் சாமமர்த்தியமாகவும் தமிழர் உரிமைகளைப் பெறக்கூடிய முறையில் அதிகாரம் தமிழர்களிடம் இருந்தது. ஆனால் அவர்களுக்குள் இருந்த ஆணவமும், நீயா? நானா? என்ற போட்டிகளாலும் அவர்கள் எதுவித முன்னெடுப்பகளையும் செய்யவில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.


ஆங்கிலேயர்களுக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருந்த தமிழ் பெருந்தலைவர்கள் "எப்பொழுதும் தாம்தான் தலைமைகளாக இருப்போம்" என்ற நிதர்சனமற்ற நம்பிக்கையினால் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுவிட்டார்கள். பருவத்தே பயிர் செய்யாத அந்தக் குறையை இத்தனை போராட்டங்களின் பின்பும் எம்மால் நிவர்த்தி செய்ய முடியவில்லையே எண்ணும்போது நெஞ்சுதான் வலிக்கிறது.

மே 18 வருகின்ற சந்தர்பங்களில் எல்லாம் இலங்கை தமிழ் அரசியல் வரலாறு தெரிந்த தமிழர்களுக்கு மேற்படி ஞாபகங்களே வந்து போகும். போராட்டத்தில் நாம் தோற்றதாகக் கொள்ள மாட்டேன். ஏனெனில் வரலாறே அதைத் தீர்மானிக்கும் சக்தியாக காணப்படுகிறது. இருந்தும் அந்தப் புனிதமிக்க போராட்டத்தில் தமது உயிர்களைத் துச்சமென மதித்து தமது வாழ்க்கையையே அதற்காக வித்திட்ட அந்த மறவர்களை, அந்த மனித நேயம் மிக்கவர்களை, அந்தச் சமூகப் பொறுப்பாளர்களை நினைவு கூருவதற்கான சந்தர்பத்தை வேண்டி நாம் இன்னும் கையேந்திக் கொண்டிருப்பதே வேதனைக் குரிய விடயம். அதனை எண்ணி எண்ணி அவமானப்பட வேண்டிய நிலை.

இதுவும் இன்றைய நிலை தவறிச் செல்லுகின்ற தமிழ் தலைமைகளினால் ஏற்பட்டதே ஒழிய அதற்கு வேறு காரணங்கள் கிடையாது. இன்னும், இன்றும் பல போலிக்காரணங்களை முன்னிறுத்தி, அவற்றை உதாரணமாகச் சொல்லி எமக்காகப் பேசாது எமது இறைமையைப் பற்றி எண்ணாது பேரினவாதிகளுக்காகப் பேசிக் காலங் கடத்துபவர்களாகவே எமது அரசியல் தலைமைகள் காணப்படுகின்றனர். முள்ளிவாய்க்கால் ஏற்படுத்திய இரணங்களைவிட அது சொல்லித் தந்த பாடங்கள் எல்லாம் ஏராளம். அது விட்டுச் சென்ற வரலாறு வெறுமனே நமக்குரியது மட்டுமல்ல. அது சர்வதேசத்துக்கானது. ஒரு நீதியற்ற, தர்மமற்ற செயற்பாடுகளுக்குத் துணை போகக் கூடாது என்ற படிப்பினை. அத்துடன் சர்வதேசத்தில் தமது உரிமைகளுக்கும், இறைமைகளுக்குமாகக் குரல் கொடுத்துக் கொண்டு போரடிவருகின்ற மக்களுக்கு முள்ளிவாய்க்கால் சம்பவம் பல உண்மைகளைச் சொல்லுகின்ற ஒரு துன்பியல் வரலாறாகவே காணப்படுகிறது.

சர்வதேசத்தால் கூட்டாகச் சேர்ந்து நசுக்கப்பட்ட ஒரு இனத்தின் வீரவரலாறு புதைந்து கிடக்கின்ற முள்ளிவாய்க்கால் மண்ணிலிருந்து ஒரு புதிய அத்தியாயம் கூட எழுதப்படலாம்.அந்த அத்தியாயங்களில் பின்னணியில் அதற்காகச் செத்து மடிந்த வீர மறவர்களின் வரலாறும் எழுதப்பட்டிருக்கும். ஒரு விருட்சத்தின் கீழ் விழும் விதைகள் ஒன்றும் வீண் போவதில்லை என்பதைப் போல... அவை மண்ணுள் மறைந்திருந்து, தம்மைப் புடம்போட்டு தாம் ஒரு விருட்சமாக வருவதற்கான காலநிலைக்காகக் காத்துக் கிடக்கும். மீண்டும் முளைவிட்டு வளர்ந்து வளர்ந்து விருட்சமாகும். அந்த விருட்சத்தைப் பல பறவைகள் சரணடையும். பலருக்கு நிழல் கொடுக்கும். நிழல்களில் உறங்கும் நினைவுகளில் அந்த விதைகள் மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தப்படும். இதுவே மே 18 இன் சித்தாந்தம்.

# முள்ளிவாய்க்கால் ஆறாத வலிகளின் ரணம்











# நான் யார்...? இஸ்லாமிய விரோதியா...? பயங்கரவாதியா...?

ஸர்மிளா ஸெய்யித்

இஸ்லாத்தின் எந்தவொரு அடிப்படைவாத சிந்தனைகளையும் ஒரு சந்தர்ப்பத்தில்கூட தூக்கிப்பிடித்திராத, குறைந்தபட்சம் புர்காவோ ஹிஜாபோகூட அணியாத பெண் நான். பெரும்பாலான இடங்களில் "நானொரு முஸ்லிம்" என்று சொல்லிக் கொண்டாலே தவிர, என்னை அவ்வாறு அடையாளப்படுத்திக் கொண்டு தோன்றுவதுமில்லை. மதம் ஆன்மீகமானதும், அது முழுக்க முழுக்க ஆழ் மனத்தோடு தொடர்பான ஒரு உள்மன யாத்திரை என்பதுமே மதம் பற்றிய என்து புரிதல். இருந்தும் நாட்டின் தற்போதைய சூழலில் நானும் ஒரு தீவிரவாதியாகவே பார்க்கப்படுகிறேன். இது எனக்கு அதிர்ச்சிதான்.

2002 முதல் பல்வேறு சமூக அபிவிருத்தித் திட்டங்களில் இணைத்துக் கொண்ட சுய முயற்சியை மட்டுமே நம்பி முன்னுக்கு வந்த பெண். ஒரு பத்திரிக்கையாளராக, எழுத்தாளராக, சமூக செயற்பாட்டாளராக என்று கால சூழ்நிலைகள், தனிப்பட்ட ஆர்வம், அனுபவங்களுக்கு ஏற்றபடியாக மாறிவந்திருக்கிறேன். மந்த்ரா லைஃப் என்ற நிறுவனம் பல்வேறு நலத்திட்டங்களுடன் சுயமாக இயங்கக்கூடியதாக 2015இல் நிறுவப்பட்டது. எந்தவித இலாப நோக்குமற்ற பல நண்பர்களும் என்னோடு இந்தப் பயணத்தில் இருக்கிறார்கள். இந்த நண்பர்களில் என்னையும் இன்னொரு நண்பரையும் தவிர மற்ற எல்லாருமே முஸ்லிம் அல்லாதவர்கள். இன மத வேறுபாடின்றி வெற்றிகரமாகப் பல பணிகளையும் செய்திருக்கிறோம்.

பெண்கள் வலு, சிறுவர்கள் அபிவிருத்தி, உளவள ஆலோசனை, பாதிக்கப்பட்டவர்களை மீட்டல், அவர்களது நிகழ்கால வாழ்வுக்கு உதவுதல், தொழில் வழிகாட்டல்கள், இரசாயன பாவனையற்ற விவசாயம் என்று பல்வேறு செயற்றிட்டங்கள் இவற்றில் அடங்கும். இந்த செயற்பாடுகள் எதுவுமே, குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தை இலக்குவைத்ததாக இருந்ததில்லை. நான் ஒரு முஸ்லிம் பெண்ணாக இருந்தபோதும் எந்தவொரு செயற்றிட்டத்தையும் முஸ்லிம் சமூகத்தை இலக்குவைத்துச் செய்ததில்லை. நிறுவனத்தைத் துவங்கியது, பதிவு செய்தது அனைத்தும் எதுல் கோட்டையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதியில்.

சிங்கள பெரும்பான்மை மக்கள்தான் பயனாளிகளாக இருந்தார்கள். மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக ஒரே இடத்தில் இயங்கிப் பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்ததில் மந்த்ரா லைஃப் நிறுவனத்திற்கென்று தனித்த பெயர் அமைந்தது. சமூக நல்லிணக்கத்திற்கான பணிகளில்கூட ஈடுபட்டோம். பல்லின மதத் தலைவர்களையும் அழைத்து மக்களோடு உரையாடும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தோம். வெவ்வேறு சமூகங்களையும், கலாசாரங்கள், மதங்களையும் பிரதிநிதிப்படுத்துவோருக்கிடையில் புரிந்துணர்வையும் நட்பையும் வளர்க்கும் விதமாகவே மந்த்ரா லைஃபின் அனைத்து செயற்றிட்டங்களும் இருந்தன.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் விளைவு தனிப்பட்ட ஒவ்வொரு மனிதரையும் ஏதோவொரு வகையில் பாதிப்படையச் செய்திருக்கிறது. மந்த்ரா லைஃபின் கனவுகளிலும் கற்கள் விழுந்துவிட்டன. மந்த்ரா லைஃபின் புதிய இடமான வாத்துவ நகரிலிருந்து விரட்டப்பட்டிருக்கிறோம். 'முஸ்லிம்', "பயங்கரவாதிகளை உருவாக்கும் சமூகத்தைச் சேர்ந்தவள்" என்ற காரணங்களின் முன்மொழிவுடன்தான் இது நிகழ்த்தப்பட்டிருக்கிறது. மந்த்ரா லைஃப் என்றால் "முஸ்லிம் பெண் ஸர்மிளா ஸெய்யித்" இல்லை, அது ஒரு கூட்டுச் செயற்பாடு, மதத்தையும் இனத்தையும் முதன்மைப்படுத்தாது பல காரியங்கள் செய்துள்ளோம் என்ற நியாயங்கள் எதுவுமே எடுபடவில்லை.

இப்படி நான் நடத்தப்பட்டது ஒரு கத்தோலிக்க தேவாலயத்தில். 130 ஆண்டுகள் பழமை வாய்ந்த 'Church of the holy sprit' என்றழைக்கப்படும் வாத்துவ தேவாலயத்தில்.

கடந்த பல ஆண்டுகளாகக் கொழும்பில் வசிக்கும் எனக்கும் வாத்துவ கத்தோலிக்க தேவாலயத்திற்குமான தொடர்பு ஒரே நாளில் தோன்றி ஒரே நாளில் முறிந்து போயிருக்கிறது. எல்லா ஆலயங்களுக்குள்ளும் நுழையும்போது எப்படியான பயபக்தியும், கண்ணியமும் உண்டாகுமோ அதற்கு எந்த வகையிலும் குறையாத உணர்வுடன்தான் 06.05.2019 அன்று நானும் அந்த ஆலயத்தினுள் நுழைந்தேன்.

காலி வீதியில் பாணந்துறை நகரை அடுத்து அமைந்திருக்கும் வாத்துவ நகருக்கும் எனக்குமான தொடர்பு இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்துதான் துவங்கியது. நான் பணியாற்றும் மந்த்ரா லைஃப் என்ற நிறுவனத்தின் வழியாகத்தான் அந்த தொடர்பு ஏற்பட்டது. எந்தவிதமான களங்கமுமேயற்ற சிந்தனையோடும் நேராகத் தெளிவான நோக்கத்தோடும்தான் அந்த நகரத்தில் காலடியெடுத்து வைத்தேன். இதற்கு முன்பு இந்த நகரத்திற்கும் எனக்கும் எதுவித தொடர்பும் இருக்கவில்லை.

2018 டிசம்பர் மாதமளவில் வாடகை குறைந்த ஒரு இடத்திற்கு மந்த்ரா லைஃப் நிறுவனத்தை மாற்றுவதற்கு இடம் தேடத் தொடங்கியபோது, சொந்தமாக ஒரு நிலத்தை வாங்கி கட்டண முறையில் பணத்தைச் செலுத்த தீர்மானித்தோம். இந்த முயற்சியில்தான் வாத்துவையில் ஒரு காணியைக் கண்டடைந்தோம். உண்மையில் அந்தக் காணிதான் எங்களைக் கண்டடைந்தது. அதாவது காணியின் உரிமையாளரே எங்களைத் தொடர்பு கொண்டு தனது காணி வாத்துவையில் இருப்பதாகவும் அதனை மந்த்ரா லை.ஃபிற்கு உபயோகப்படுத்துவதற்கும் ஆலோசனை தந்தார்.

'அத்பவுர' என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி வழியாக அவர் மந்த்ரா லைஃபை அறிந்துகொண்டு அதன் செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்டிருந்தார். மந்த்ரா லைஃபிற்கு அது பொருத்தமாகவும் அமைந்துவிடவே அந்த இடத்தை வாங்க நினைத்தோம். ஆனால், அவ்வளவு வசதி இருக்கவில்லை. ஆகவே, 15 ஆண்டுகள் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, மெது மெதுவாக அதன் உரித்தைப் பெறுவதற்கு உரிமையாளருடன் பொருந்தி அதற்கான உடன்படிக்கைகள், உறுதிகள் என்ற சட்டப்படியான ஆவணங்களைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தோம்.

இந்தக் காணி உரிமையாளர் ஒரு சிங்களவர். இதே வாத்துவ நகரில் பிறந்து வளர்ந்தவர். இலங்கை சிறுபான்மை சமூகம் பற்றி இவருக்கு நிரம்ப நல்லபிப்பிராயங்கள் இருந்தன. எங்களோடு காணி உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதில் அவருக்கு எந்த வகையிலும் இரண்டாவது எண்ணப்பாடு இருக்கவில்லை. சிங்களவரான அவரோடு உடன்படிக்கை செய்வதில் எங்களுக்கும் எந்தவித தடுமாற்றமும் இருக்கவில்லை.

இந்தக் காலத்தில் குறிப்பிட்ட அந்தக் காணியில் இருந்த வீட்டில் வாடகைக்கு ஒரு குடும்பம் வசித்துக் கொண்டிருந்தது. அவர்கள் இரண்டு ஆண்டுகள் மாத்திரமே செய்து கொண்ட உடன்படிக்கையுடன் ஏழு ஆண்டுகள் சட்டவிரோதமாக அங்கு குடியிருந்தார்கள். உரிமையாளரும் அவரது மொத்தக் குடும்பமும் வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தபடியால் வாடகை குடியிருப்பாளரை அவ்விடத்திலிருந்து அகற்ற முடியாதுபோன சூழல் புரிந்தது. நான் அந்த வீட்டுக்குச் சென்று அங்கு குடியிருந்த தம்பதியருடன் பல முறை சுமுகமான உரையாடல்களைச் செய்தேன். அதிலிருந்து அவர்கள் புதிய வீடொன்றை அமைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. புதிய இல்ல வேலைகள் முடியும் வரைக்கும் அந்த வீட்டில் வசிக்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். நாங்களும் அனுமதித்தோம். இந்த அனுமதி ஒரு மாத காலத்தை விஞ்சியது. குறிப்பிட்ட தேதியில் அந்த மனிதர் வீட்டைக் காலி செய்யவில்லை. எந்தக் கணமும் வீட்டைக் காலி செய்வதற்கான எல்லா வசதியும் அவர்களுக்கு இருந்தது. காரணம், அவர் வாத்துவவிலேவே பிறந்து வளர்ந்தவர். அதே தெருவில்தான் அவரது தாயின் வீடுகூட இருந்தது. இருந்தும் அந்த நபரின் நோக்கம் ஒருவித தெளிவற்றதாயிருக்கவே சில சிறு விவாதங்களைச் செய்யவும் நேர்ந்தது. வாடகைக் குடியிருப்பாளர் வீட்டைக் காலி செய்த கடைசி நாள்தான், ஈஸ்டர் குண்டு வெடிப்புத் தாக்குதல்கள் இடம்பெற்று, நாட்டின் சூழ்நிலை முற்றாக மாறியது.

மந்த்ரா லைஃபிற்காக எடுத்துக் கொண்ட இடத்தை இந்தக் காலத்தில் பூட்டி வைக்க மட்டுமே முடிந்தது. குண்டு வெடிப்புச் சம்பங்கள் நடந்த ஒன்பதாவது நாள் வாத்துவை வீட்டைப் புனர்நிர்மாணம் செய்வதற்காக ஒரு கட்டுமாணத் தொழிலாளியுடன் சென்றேன். அப்போது வீட்டைக் காலி செய்து சென்றிருந்த முன்னாள் குடியிருப்பாளர் உடனடியாக அங்கு வந்து, கிராம சேவகர் சந்திக்க சொல்லியதாகச் சொன்னார். இந்த இடத்தில் நீங்கள் செய்யப்போகின்ற செயற்றிட்டம் பற்றியும் அவர் கேட்டதாகக் கூறினார். அன்று கிராம சேவகரைச் சந்திப்பதற்கான தினமாக இருக்கவில்லை ஆதலால் சந்திக்க முடியவில்லை.

மறுநாள் காலை வாத்துவைப் பொலிஸலிருந்து பிரியந்த என்ற பொலிஸ் உத்தியோகத்தர் அழைத்து காணி தொடர்பான விபரங்களைக் கேட்டார். அதன் ஆவணங்களை எடுத்துக் கொண்டு பொலிஸ் நிலையம் வரும்படி கூறினார். அதே வேகத்தில் காணி உரிமையாளரும் வெளிநாட்டிலிருந்து அழைத்தார். வாத்துவை தேவாலய பிதா அழைத்ததாகவும் காணியை இப்போது வைத்திருப்பவர்களின் விபரங்களைக் கேட்டதாகவும் கூறினார். அத்துடன், தேவாலய பிதாவின் கைப்பேசி எண்ணை குறுஞ்செய்தியாக அனுப்பி அவரைத் தொடர்பு கொள்ளும்படியும் கேட்டிருந்தார். நான் உடனே பிதாவைத் தொடர்பு கொண்டேன். அவர் தேவாலயத்தில் வந்து சந்திக்கும்படி கேட்டுக் கொண்டதுடன், 06.05.2018 காலை 8.00 க்கு வரும்படி நேரத்தையும் குறிப்பிட்டார்.

# ஆந்தைகளின் மொழி


அக்பர் பீர்பால் கதைகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

“தங்கள் கட்டளைப் படி நடக்க சித்தமாக இருக்கிறேன்” என்று பணிவுடன் பீர்பல் பதிலளித்தார். “பீர்பல்! நீ உடனிருந்தால் களைப்பே தெரிவதில்லை. நாவில் உனக்கு இத்தனை வலிமையைக் கொடுத்த இறைவன், உடலிலும் கொடுத்து இருக்கிறாரா என்பதையும் அறிய ஆசைப்படுகிறேன்” என்றார். “ஆகட்டும் பிரபு!” என்றார் பீர்பல்.

சற்று நேரத்திற்குப்பின், அக்பர் ஒரு பெரிய படை வீரர்களின் அணியுடன் காட்டை நோக்கிப் புறப்பட்டார். பீர்பலும் அக்பருடன் சென்றார். காட்டினுள் நுழைந்தபிறகு, அக்பரின் வீரர்கள் தாரை, தப்பட்டை ஆகியவற்றை உரக்க ஒலித்துக் காடே அதிரச் செய்தனர். அந்த சத்தத்தைக் கேட்டு காட்டு மிருகங்கள் மிரண்டு அங்குமிங்கும் சிதறி ஓட, அக்பரும், மற்றவர்களும் அவற்றைத் துரத்திச் சென்று, கொன்று குவித்தனர்.

திடீரென ஒரு புலி புதரிலிருந்து சீறிப் பாய்ந்து அவர்களை நோக்கி வந்தது. தாரை, தப்பட்டைகளின் ஒலியினால் எரிச்சல்அடைந்த புலி அவர்கள் மீது பாய முனைந்த போது, அக்பர் தன் கையில் இருந்த ஈட்டியை அதன்மீது எறிய, பயங்கரமாக உறுமிக் கொண்டே புலி மண்ணில் சாய்ந்தது. புலி இறந்து விட்டதால் அக்பர் உற்சாகமுற்றுக் கையை




உயர்த்திக் கூச்சலிட, சுற்றியிருந்த வீரர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

மாலைக்குள் அக்பர் மற்றொரு புலியையும் வீரத்துடன் வேட்டையாடிக் கொன்றார். பிறகு அனைவரும் சென்று ஓய்வு எடுக்க, அக்பர் தனியாக அமர்ந்து பீர்பலுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

மாலை மங்கிய நேரம்! பகல் முழுவதும் வானில் பறந்து திரிந்து கொண்டிருந்த பறவைகள் தங்கள் கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டு இருந்தன. அவற்றின் இனிமையான குரல்களை இருவரும் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அமர்ந்துஇருந்த இடத்திற்கு அருகில் இருந்த ஒரு மரத்தில் இரு ஆந்தைகள் பறந்து வந்து உட்கார்ந்து ஒலியெழுப்பத் தொடங்கின.....


(அடுத்த வாரம் நிறைவுபெறும்)

# அட அப்படியா?



- இதயத்திற்கு இடம் கொடுக்கும் வகையில் இடது நுரையீரல் வலது நுரையீரலை விட சிறிதாக அமைக்கப்பட்டுள்ளது.
- இறைச்சி உண்டதும் பால் குடித்தால், அதிலுள்ள கால்சியத்தை உடல் ஏற்றுக் கொள்ளாது. இரண்டு மணி நேரம் கழித்தே பால் குடிக்க வேண்டும்.
- இசையில் சட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என ஏழு ஸ்வரங்கள் உள்ளன. அவற்றைதான் ச ரி க ம ப த நி என்கிறோம்.
- மனித உடலில் மிகவும் பலமானது விரல் நகங்களே. அதில் கெராடின் சத்து உள்ளது. இது காண்டாமிருகத்தின் கொம்புகளில் காணப்படுவது. மரணத்திற்குப்பிறகும் கூட நகம் ஒன்றுமே ஆகாது.

# இங்கே இவர்கள் இப்படி



**பாப்பரசர் முதலாம் ஜோன் போல்**

திருச்சபையில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்ட பெருமை இவருக்குரியது. தொடர்ந்து, திருச்சபையில் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்துவாரென எதிர்பார்க்கப்பட்ட திருத்தந்தை முதலாம் ஜோன் போல், 33 நாட்கள் மாத்திரமே திருத்தந்தையாக கடமையாற்றினார். பாப்பரசராக மக்கள் மத்தியில் இவர் பிரபலமாவதற்கு முன்னரே, கடந்த 1978 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28 ம் திகதி, மாரடைப்பால் உயிர்நீத்தார். உலகில் அதிகுறைந்த நாட்கள் திருத்தந்தையாக வாழ்ந்தவர்களில் முதலாம் ஜோன் போல் திருத்தந்தையும் ஒருவராவார்.

# கேள்விக்கென்ன பதில்?

1. நமது ஒவ்வொரு கண்ணிலும் எத்தனை தசைகள் உள்ளன?
2. வைரத்தில் மொத்தம் எத்தனை மூலைகள் உள்ளன?
3. சிரிக்கவும், உம்மென்றிருக்கவும் எத்தனை தசைகள் அவசியமாகின்றன?
4. மனிதனை அடையாளம் காண கைரேகை பயன்படுகிறது. அதுபோல மாட்டை அடையாளம் காண பயன்படுவது எது?
5. கண்கள் இருந்தும் பார்வையில்லாத பிராணி?

**விடைகள்**

1.ஆறு தசைகள். 2.ஆறு மூலைகள்.
3. சிரிக்க - 17 தசைகள் உம் - 43 தசைகள்
4. மூக்கு ரேகை. 5. வௌவால்

# ஒரு குறள் மூன்று விளக்கம்

**குறள் 77:**
**என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்.**




**கலைஞர் மு.கருணாநிதி உரை:**

அறம் எதுவென அறிந்தும் அதனைக் கடைப்பிடிக்காத வரை, அவரது மனச்சாட்சியே வாட்டி வதைக்கும். அது வெயிலின் வெம்மை புழுவை வாட்டுவதுபோல இருக்கும்.

**மு.வரதராசனார் உரை:**

எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவது போல் அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்.

சாலமன் பாப்பையா உரை:

எலும்பு இல்லாத புழுவை வெயில் காய்ந்து கொள்வது போல அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள் காய்ந்து கொல்லும்.

# ஆங்கிலம் கற்போம்

## வினைச்சொல் வடிவங்கள்




“do” எனும் ஒரு வினைச்சொல்லை எடுத்துக்கொண்டோமானால், அது do, doing, does, did, done என ஐந்து வினை வடிவங்களாகப் பயன்படுவதைப் பார்க்கலாம். இவ்வாறு ஆங்கில வினைச் சொற்கள் ஐந்து வினை வடிவங்களாக பயன்படுகின்றன.

மேலும் சில எடுத்துக்காட்டாக இந்த அட்டவணையைப் பாருங்கள்.

| Forms | Verbs | | | |
|---|---|---|---|---|
| Base Form | do | go | speak | play |
| Progressive Form | doing | going | speaking | playing |
| Third Person Form | does | goes | speaks | plays |
| Past Form | did | went | spoke | played |
| Past Participle Form | done | gone | spoken | played |

1. “Base Form” என்பது அடிப்படை வினை வடிவமாகும். இவைகளே வினைச்சொல் வடிவங்களில் முதன்மையானவை.

*எடுத்துக்காட்டாக:*

do
go
play

2. “Progressive Form” என்பது அடிப்படை வினைச் (base form) சொற்களுடன் “ing” யும் இணைந்து பயன்படுபவைகள் ஆகும். இதனை “Present Participle Form” என்றும் அழைப்பர்.


*எடுத்துக்காட்டாக:*

do - doing
go - going
play - playing

3. “Third Person Form” என்பது சாதாரண நிகழ்காலத்தின் மூன்றாம் நபர் ஒருமை வினைச்சொற்களாகப் பயன்படுபவைகள் ஆகும். அதாவது “Base Form” cld; “s, es” போன்ற எழுத்துக்கள் இணைந்து பயன்படுபவை.

(மிகுதி அடுத்த வாரம்)

# மட்டக்களப்பு மான்மியம்




மட்டக்களப்பு தேசத்தின் வரலாற்றைக் கூற எழுந்த நூலே மட்டக்களப்பு மான்மியம். இந்நூல் யாரால், எப்போது எழுதப்பட்டது எனத் தெரியவில்லை. ஏட்டுச் சுவடிகளாக இருந்த இந்நூலை எவ்.எக்ஸ்.சி. நடராசா என்பவர் 1962 இல் தொகுத்து - அச்சிட்டு வெளியிட்டார்.

ஆதிகாலம் தொட்டு போர்த்துக்கேயரின் ஆரம்ப ஆட்சிக்காலம் வரையான மட்டக்களப்பின் வரலாற்றை இந்நூல் கூறுகிறது. எனினும் ஏட்டுச் சுவடிகளின் தொகுப்பு என்பதால் கர்ண பரம்பரைக் கதைகளும் நம்பிக்கைகளும் நூலில் நிறைந்துள்ளன. இதனால் சில குழப்பங்களும் காணப்படுகின்றன.

ஐந்து பகுதிகளைக் கொண்ட இந்நூல் மட்டக்களப்பு தேசத்தை ஆண்ட (இன்றைய அம்பாறை மாவட்டமும் அடங்கும்) மன்னர்களின் வரலாறு, சாதிப் பிரிவு, ஆலயமுறை, கல்வெட்டுக்கள் பற்றியும் பல விடயங்களை கூறுகிறது.



# பிட்டு / புட்டு

பிட்டு அல்லது புட்டு என்பது அரிசி மா, துருவிய தேங்காய் சேர்த்து நீராவியில் அவித்து தயாரிக்கப்படும் ஓர் உணவு. இப்போது அரிசி மாவிற்குப் பதிலாக கோதுமை மாவும் பயன்படுகின்றது. காலை அல்லது இரவு உணவாக விரும்பி உண்ணப்படும் இது ஈழத்தமிழர்களின் உணவுப் பட்டியலில் தினசரி இடம்பிடித்து விடுகிறது.

இது இலங்கையிலும், இந்தியாவின் கேரளாவிலும் அதிகம் விரும்பி உண்ணப்படுகிறது. அதுவும் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பிட்டுக்கு தனிச் சிறப்பு உண்டு. நீத்துப்பெட்டிப் பிட்டு, குழல் பிட்டு ஆகியவையே இலங்கையில் பிரபலம்.

அரிசிமா, கோதுமை மா தவிர குரக்கன், ஒடியல், ஆட்டா மாவிலும் பிட்டு தயாரிக்கப்படுகின்றது. கீரைப் பிட்டு, மரக்கறிப் பிட்டு, பால் பிட்டு, வெங்காயப் பிட்டு என இடுபொருள்களின் வாரியாகவும் பிட்டுக்கள் வகைப்படுகின்றன.


# சத்தகம்

சத்தகம் அல்லது காம்புச் சத்தகம் என அழைக்கப்படும் கத்தி வகைகள் பனை ஓலை சார் வேலைகளை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது.

பனை ஓலைகளைக் கிழிக்கவும், ஈர்க்கை வேறாக்கவும், பெட்டி, பாய் இழைக்கும்போது ஓலையை வாரவும் பயன்படுத்தப்பட்டது.

பூப்புனித நீராட்டு விழா, புதுமனைப் புகுவிழாவின் போது 'நிறைநாழி" வைப்பதற்கும் சத்தகம் பயன்பட்டது.

முன்னர் ஒவ்வொருவரின் வீடுகளிலும் இருந்த சத்தகம் இப்போது சடங்குப் பொருளாக மட்டுமே உள்ளது. இதனை வைத்திருப்பவர்களின் எண்ணிக்கையும் அருகி விட்டது.



# பறை

பறை என்பது இசைக் கருவியைக் குறிக்கிறது. ஆனால், யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் கதைத்தல், பேசுதல் எனப் பொருள்படும். பறை என்பதை அடிச் சொல்லாகக் கொண்டு பல சொல்லாடல்கள் புழக்கத்தில் உள்ளன. உதாரணமாக பறைதல், பறையாத, அவன் என்ன பறைஞ்சவன் போன்ற சொற்களை சுட்டலாம்.

இப்பேச்சு வழக்கு சொல்லே காலப்போக்கில் சாதிய வேறுபாடுகளின் அடிப்படையில், பறை என்ற தூய சொல் தொழில் பெயராக வழங்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. பறை என்ற இந்தச் சொல், சிங்கள பேச்சு வழக்கிலும் பயன்பாட்டில் உள்ளது.



# மன்னார் கோட்டை

மன்னார் தீவில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட கோட்டையே மன்னார் கோட்டையாகும். 1505 இல் இலங்கை வந்த போர்த்துக்கேயர் 1560 இல் மன்னாரைக் கைப்பற்றினர். யாழ்ப்பாண இராச்சியத்தில் போர்த்துக்கேயரால் முதன் முதலாகக் கைப்பற்றப்பட்ட பகுதி இதுவாகும். சதுர வடிவமான இந்தக் கோட்டை யாழ்ப்பாணக் கோட்டையையும் விட காலத்தால் முந்தையது. கோட்டையின் நான்கு மூலைகளிலும் கொத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



முதுசொம் மீட்போம்!

இ.கவிமகன்

(கட்டுரையாளர் விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவின் மருத்துவராகக் கடமையாற்றியவர். தற்போது புலம்பெயர்ந்து வெளிநாடு ஒன்றில் வசித்து வருகிறார்

# முள்ளிவாய்க்கால் ஆறாத ரணங்களின்



முள்ளிவாய்க்கால் எனும் பெயரை அறியாத தமிழன் இல்லை என்று கூறுமளவுக்கு, ஓர் இனத்தின் மீதான அவலம் நிகழ்த்தப்பட்ட இடம். முல்லைத்தீவு மாவட்டத்தின் குறுகிய பிரதேசம், இன்று சர்வதேச அளவில் அறியப்பட்ட பகுதி!

இந்த இடத்தில் 2009 ஆம் வருடத்தின் மே 16,17,18 ஆகிய நாள்களில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மனித அவலங்கள் எண்ணற்றவை. கொத்துக்குண்டுகள், இரசாயனக் குண்டுகள் என வரையறையின்றி, காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை இராணுவம் நடத்தியது. அதில் பல ஆயிரக் கணக்கான மக்கள் உடல் உறுப்புகளை இழந்து, உயிர்களை இழந்து, செல்லும் இடம் தெரியாமல் ஏதிலிகளாக நின்றார்கள்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் பதுங்குகுழிகளைக்கூட அமைக்க முடியாத நிலையில் மக்கள் இருந்தார்கள். முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு வீதியின் ஒருபுறம் கடற்கரை மணலும் அதன் மறுபுறம் வறண்டகழியும் கொண்ட நிலப்பரப்பு. அதனால் பதுங்குகுழிகளை அமைப்பது சிரமமாக இருந்தது. துணிகளால் அல்லது சேலைகளால் மணல் பைகளை நான்கு பக்கமும் அடுக்கி அதற்குள் தங்கினார்கள். சில மக்கள் முடிந்தவரை கிடங்குகளைத் தோண்டி அதற்குள் தம்மைப் பாதுகாக்க முனைந்தார்கள் ஆனாலும், ஒழுங்கான பதுங்குகுழிகள் இல்லை. அதனால் அதிகமான உயிரிழப்புக்கள் நடந்தன.

இது ஒருபுறம் இருக்க மறுபுறம் காயம்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி இல்லாமலே இருந்தது. மண் போட்டால் மண் விழாத அளவுக்கு காயப்பட்டவர்கள் நிறைந்துவழிந்தனர். ஆனாலும் அதைச் சமாளிக்கும் அளவுக்கு மருத்துவ ஊழியர்களோ, வைத்தியர்களோ - மருந்துகளோ இருக்கவில்லை.

மருத்துவமனையின் அமைதி காணாமல் போயிருந்தது. மக்களின் அலறல் ஒலி காதைப் பிய்த்துக் கொண்டிருந்தது. அந்த சோகத் தணல் மனதை என்னவோ செய்துகொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான மக்களின் கண்ணீராலும் இரத்தத்தாலும் மருத்துவமனை இயங்கிய இடம் நனைந்து கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் இரத்தம் பெருக்கெடுத்து ஓட, குடல்கள் சரிந்த நிலையில் பெரும் வயிற்றுக்காயங்களும் முகம் சிதைந்தநிலையில் எரிகாயங்களும் என மக்கள் குவிந்து கிடந்தனர்.

யாரும் யாருக்கும் உதவமுடியாத நிலை. ஏனெனில், எல்லோருக்கும் உயிர் பறிபோகும் நிலை! அதனால் காயப்பட்டால்கூட இரத்தப்போக்கைக் கட்டுப்படுத்த யாரும் இல்லாமல் பலர் இறந்து போனார்கள். விழும் எறிகணைகள் குடும்பம் குடும்பமாக உயிரெடுத்துக் கொண்டிருந்தன. நந்திக்கழி பகுதியில் (புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு வீதியில் நந்திக்கடல் பக்கமாக இருக்கும் பகுதி) மே 14 ஆம் திகதி இரவு மட்டும் நடந்த எறிகணைத் தாக்குதல்களில் பல குடும்பங்கள் ஒரே இடத்தில் பலியெடுக்கப்பட்டன.

மே 15 ஆம் நாளன்று, மருத்துவமனை என இயங்கிய இறுதி இடமும் அரசப் படைகளின் தாக்குதல்களால் மூடப்பட்டது. முள்ளிவாய்க்கால் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டடத்தில் இயங்கி வந்த அந்த மருத்துவமனையே, படையினரின் நேரடித் தாக்குதலுக்குள்ளாகி இருந்தது. மருத்துவமனையை இராணுவம் கைப்பற்றவிருந்த நிலையில், அங்கிருந்து மக்களுக்கான மனிதநேயப் பணியாற்றிய மருத்துவர்கள், விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவுப் போராளிகள் போன்றவர்கள் உள்பட அனைவரும் வட்டுவாகல் நோக்கி நகர்கின்றனர். அதனால் அங்கே மருத்துவமனையைத் தொடர்ந்து இயக்கமுடியாமல் போனது.

ஆர்.பி.ஜி. வகை உந்துகணை மற்றும் 60 மி.மீ. எறிகணைகள், ஆட்லறி மற்றும் குறுந்தூரவீச்சு கொண்ட எறிகணைகள், மருத்துவமனை வளாகத்துக்குள் அதிகமாக வீழ்ந்து வெடிக்கின்றன. சர்வதேச விதிமுறைகளின் படி மருத்துவமனைக் கட்டடங்களின் கூரைகளில் சிவப்பு நிற (+) அடையாளம் இடப்பட்டிருந்தும், படைகள் கண்மூடித்தனமாக மருத்துவமனை மீது தாக்குதலை மேற்கொள்கின்றன. இதில், அங்கே அறுவை சிகிச்சை செய்துகொண்டிருந்த மருத்துவர் இறையொளி கொல்லப்பட்டார். அதன் பின் அந்த மருத்துவமனையும் கைவிடப்பட வேண்டிய நிலைக்கு ஆளானது.

அங்கே பணியாற்றிய மருத்துவர்கள், மருத்துவப் போராளிகள், உதவியாளர்கள் மனிதநேயப் பணியாளர்கள் என அனைவரும் உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டிவந்தது. அதனால் “எம்மைக் கைவிட்டுச் செல்லாதீர்கள்.. எங்களைக் காப்பாற்றுங்கள், ஆமி பிடிச்சா எங்களைச் சுட்டுப் போடுவான்...” என கதறி அழுது கொண்டிருந்த காயப்பட்டவர்களைக் கைவிட்டு வெளியேறினார்கள். காயப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டவர்கள் மருத்துவமனைக்குள்ளையே மீண்டும் காயப்பட்டார்கள். இதில் பலர் உயிரிழந்தனர். உயிர் தப்பியவர்கள் படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கூறியபடி சுட்டுக்கொல்லப்பட்டார்களா? இல்லையா? என்பது அறியாத நிலை.

வயிற்றில் காயப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்ட வயதான தாய் ஒருத்தி, இராணுவம் தன்னைச் சுட்டுவிடும் என்ற பயத்தில் நிலத்தில் அரற்றி அரற்றி மருத்துவமனையிலிருந்து வெளியேற முற்பட்டாள். அப்போது மருத்துவ உதவியாளன் ஒருவன், அந்தத் தாயை தூக்கிச் செல்ல ஓடி வந்தான். ஆனால், சிங்களப் படை ஏவிய எறிகணை அவர்களின் அருகில் விழுந்து இருவருமே அந்த இடத்திலேயே சாகடிக்கப்பட்டனர். இவ்வாறு சாவுகள் சாதாரணமாகி அந்த மருத்துவமனைக் கட்டடம் சிதைந்துபோனது.

முள்ளிவாய்க்கால் பகுதி- உண்டியல் சந்தி முதல் வட்டுவாகல் வரையாக கிட்டத்தட்ட 3 ச.கி.மீ. பரப்புக்குள் முடக்கப்பட்டு, அங்கு வாழ்ந்த 3 லட்சத்துக்கும் அதிகமான மக்களால் திணறுகிறது. அங்கே சாதாரணமாக ஒரு கைக்குண்டு வெடித்தாலும் பல நூறு உயிர்கள் பிரியும்நிலையில் மக்கள் இருந்தார்கள். அதற்குள் விடுதலைப் புலிகளும் இருந்தார்கள். பெரும்பாலும் மக்கள் வாழ்ந்த இடங்களைத் தவிர்த்து அவர்கள் இருந்தாலும் குறுகிய நிலப்பரப்புக்குள் அது சாத்தியமற்று இரு பகுதியினரும் சேர்ந்து வாழவேண்டிய சூழல் உருவாகி இருந்தது. அதனால் படையினர் புலிகள் மீதான இறுதித் தாக்குதல் அதிகரிக்கப்பட்டுள்ளது என பிரசாரத்தை முன்னெடுத்துக் கொண்டு மக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தது.

அதுவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் காயப்பட்டவர்களை திருகோணமலைக்கு கொண்டுசெல்வதற்கென வருகை தந்த கப்பல்கூட நின்றுபோனது. அதற்கும் அரசாங்கம் தடைவிதித்திருந்தது. அதற்கு முந்தைய நாள்களில் கப்பல் வந்துசெல்லும்போதுகூட படைகளின் பீரங்கிப் பிரிவு கப்பல் தரித்து நின்ற இடத்தைச் சுற்றி கடலில் எறிகணைகளை ஏவினர். அதனால் காயப்பட்ட மக்கள் கப்பலுக்குச் சென்றால் இறந்துவிடுவோமோ என அஞ்சி கப்பலுக்குப் போக பயந்தனர். இது ஒரு புறம் இருக்க இப்போது கப்பலை முற்றுமுழுவதுமாக தடுத்து வைத்தது, இலங்கை அரசு. அதனால் முள்ளிவாய்க்கால் பகுதி முழுவதும் காயப்படுபவர்கள் செத்துக்கொண்டிருந்தார்கள்.

செத்தவர்களை அடக்கம்செய்யக்கூட முடியவில்லை. உயிரற்ற உடலங்கள் அப்படியே கிடந்தன. மனிதநேயப் பணியாற்றிய போராளிகளின் மருத்துவப்பிரிவு மருத்துவர்கள், நிர்வாக சேவை, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், காவல்துறை போன்ற பிரிவுகள் தொடர்ந்தும் தம்மிடம் இருந்த வளங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு மருத்துவம் பார்த்தனர். ஆனாலும்

# ...ன் வலி...!

காயங்கள் அதிகமானதால் அவர்களால் எதையும் செய்யமுடியாத கையறு நிலைக்குச் சென்றனர்.

இந்நிலையில், உண்டியல் சந்தி முதல் கடற்கரைப் பக்கமாக உள்நுழைந்து கொண்டிருந்த படைகள் நேரடித் துப்பாக்கித் தாக்குதல்களை தீவிரப்படுத்துகிறார்கள். அதனால் மக்கள் வட்டுவாகல் நோக்கி நகர்கிறார்கள். இன்னும் சுருங்கிக்கொண்டிருந்த குறுகிய பிரதேசத்துக்குள் மக்களின் சாவுகள் அதிகரித்துக்கொண்டிருந்தன. வான்படை, கடற்படை என்ற வித்தியாசம் இன்றி வட்டுவாகலை நோக்கி போய்க்கொண்டிருந்தவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல்களைச் செய்கிறார்கள்.

இந்த நிலையில், 16 ஆம் திகதி மாலை நேரம் விடுதலைப் புலிகளின் காவல்நிலைகள் என்று எதுவும் இருக்கவில்லை. அவர்கள் சண்டைகளைத் தவிர்த்தார்கள். ஓரிரண்டு இடங்களில் இரு பகுதியும் சண்டையிட்டாலும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் பெரும்பாலும் நின்றுபோயிருந்தன. ஆனாலும், படையினர் தொடர்ந்து விடுதலைப் புலிகளைத் தாக்குவதாக அறிவித்தபடி, மக்களையே தாக்கிக் கொண்டிருந்தனர். இனி எதுவும் இல்லை என்ற கையறு நிலை ஏற்பட்டுவிட்டது.

## மே 16,17,18 நாள்களில் நடந்தவை என்ன?

அன்று இரவு முல்லைத்தீவை நோக்கி வட்டுவாகல் பாலத்தின் ஊடாக மக்கள் செல்லத் தொடங்குகின்றனர். ஆனாலும், இரவு நேரம் என்பதால் பாலத்தைத் தாண்டி உள்ளே செல்லும்போது, மக்களை விடுதலைப் புலிகளாகக் கருதி இராணுவம் தாக்கலாம் என அஞ்சி அங்கேயே விடியும் வரை நீண்ட வரிசையில் காத்திருக்கிறார்கள். ஆனால், காத்திருந்த அந்த இடத்திலேயே பெரும் சேதத்தை விளைவிக்கக்கூடிய கொத்துக்குண்டு, இரசாயனக் குண்டுகளைப் போட்டு சிங்கள அரசு தாக்கியது. அங்கு எந்தப் பாதுகாப்பு அரணும் இல்லாமல் வீதியில் இருந்த மக்கள் பல நூறு பேர் கொல்லப்பட்டும் காயப்பட்டும் போனார்கள். ஆனாலும் போக்கிடம் வேறு ஒன்றும் தெரியாமல் மக்கள் மீண்டும் அங்கேயே காத்திருந்தனர்.





காலை 3 மணி முதல் 4 மணிவரை இருக்கும்... காட்டுக்குள் இருந்து திடீர் என்று வெளிவந்த இராணுவம், வீதியில் அமர்ந்திருந்த மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியது. இருப்பது மக்கள் எனத் தெரிந்தும் துப்பாக்கியால் சுட்டதில் முன்வரிசையில் இருந்தவர்கள் பலர் உயிரிழந்தார்கள். அதன் பின் ஒற்றை வரிசையில் வருமாறு சிங்கள மொழியில் கட்டளையிட, துப்பாக்கி சூட்டினால் சிதறி ஓடிய மக்கள் ஒற்றை வரிசையில் வட்டுவாகல் பாலத்தை நோக்கிக் கொண்டு செல்லப்பட்டனர். முன்வரிசையில் இறந்தவர்களின் உடலங்களைக் காலால் நகர்த்திவிட்டு இறந்தவர்களின் உறவுகளே முன்னோக்கிச் சென்ற கொடுமை, தமிழின வரலாற்றில் நடக்காத ஒன்று. ஆனாலும் அன்று நடந்தது!

அங்கிருந்து முல்லைத் தீவுக்குள் உள்நுழைய அனுமதிக்கப்படவில்லை. அதனால் வட்டுவாகல் பாலத்தில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கிறார்கள். அதிகாலை 5 மணியிருக்கும் முல்லைத்தீவு படை முகாமில் இருந்து ஆட்லறி எறிகணைகள் வீசப்பட்டன. வழமையைவிட அதிகமாக தாக்குதல் நடத்தப்படுகிறது. அதே நேரம் விடுதலைப் புலிகளும் சண்டையிடுவது புரிகிறது. நந்திக்கடல் பகுதி மற்றும் முள்ளிவாய்க்கால் - புதுக்குடியிருப்பு வீதி போன்றவற்றில்தான் சண்டை நடப்பதற்கான அறிகுறிகளை மக்கள் உணர்ந்துகொள்ள முடிந்தது. ஆனாலும் அதற்குள் என்ன நடக்கிறது என்பதை வட்டுவாகலில் இருந்த மக்களால் உணரமுடியவில்லை.


அந்தவேளையில் திடீர் என்று வட்டுவாகல் பாலத்தை நோக்கி, முள்ளிவாய்க்கால் பக்கத்தில் இருந்து சிங்களப் படைகள் துப்பாக்கியால் சுடுகிறார்கள். அதிலும் பல மக்கள் காயப்பட்டு விழுகிறார்கள். அனைவரும் நிலத்தில் அமர்ந்திருந்ததால் பெரும்பாலான காயங்கள் கழுத்தில் அல்லது தலையிலே ஏற்பட்டன. சிலருக்கு பெருங்காயங்கள் ஏற்பட்டபோதும் அவர்களை மருத்துவத்துக்காக முன்னால் கொண்டு செல்ல இராணுவம் அனுமதிக்கவில்லை. காயப்பட்டவர்களுக்கு கட்டுவதற்கு எதுவுமற்ற நிலையில் இரத்தம் வெளியேறிக் கொண்டிருக்கிறது. தலையில் பலமாகக் காயப்பட்ட 25 வயது மதிக்கக் கூடிய இளைஞன் தன் தாயின் முன்னே இறந்துபோனான். அவனைத் தூக்கிக்கொண்டு இராணுவத்திடம் அவனைக் காப்பாற்றும்படி கெஞ்சினார், அந்தத் தாய். ஆனால் இராணுவமோ அதற்கு அனுமதிக்கவில்லை.

காலை 8 மணியளவில், மக்களை ஒற்றை வரிசையில் உள்ளே வருமாறு படையினர் திடீரெனப் பணித்தார்கள். உள்ளே நுழைந்த மக்கள், மிக நீண்ட வரிசையில் ஒரு வயல்வெளிக்குள் கொண்டு செல்லப்பட்டனர். அங்கே கம்பிகளால் சுற்றி அடைக்கப்பட்டிருந்த பெருவெளிக்குள் அனைவரும் அடைக்கப்பட்டனர். கம்பி ஓரங்களில் காவலுக்கு நின்ற இராணுவச் சிப்பாய்கள் வந்துகொண்டிருந்த மக்கள் மீது தடிகளாலும் துப்பாக்கிப் பிடிகளாலும் அடித்துத் துன்புறுத்துவது ஒருபுறம் நடந்துகொண்டிருக்க. கம்பிக் கூட்டுக்குள் கொண்டு செல்லப்பட்ட மக்கள் பெரும் துயரத்தை சந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

பல நாள்கள் உணவில்லாது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வந்திருந்த மக்களுக்கு இங்கும் அதேநிலை நீடித்தது. முள்ளிவாய்க்கால் களத்தில் நீரை அருந்தியாவது பசி போக்கிய மக்கள் இங்கே நீர்கூட இல்லாது தவித்தார்கள். உண்மையில் மறக்க முடியாத கொடுமை. நிலத்தில் சிந்திக்கிடந்த கழிவு நீரில் ஒரு புறம் நாய் நீரைக் குடித்துக்கொண்டிருக்க... சேறாய்க் கிடந்த அந்தத் தண்ணீரைத் துணிபோட்டு வடித்தெடுத்து எம்மக்கள் அருந்திய கொடுமையும், மே 18 இல்தான் நடந்தது. குழந்தைகள் தாகத்தாலும் பசியாலும் வாடினார்கள். இராணுவம் உணவுப்பொதிகளை வழங்கினாலும் அதை எல்லோரும் பெறக்கூடியதாகவோ அல்லது தண்ணீரைச் சரியாகக் கொடுக்கவோ இல்லை. விலங்குகளுக்குத் தூக்கி எறிவதைப் போல அன்று உணவுப்பொதிகளைத் தூக்கி எறிந்துவிட்டு அதைப் பிரித்து உண்ணத் தொடங்கிய பலரை, அந்த இடத்திலேயே அடித்துத் துன்புறுத்தி உணவைப் பறித்தெறிந்த கொடுமையும் நடந்தது.

முள்ளிவாய்க்காலில் இருந்து மக்களோடு மக்களாக இராணுவத்திடம் சரணடைந்த போராளிகள் பலர், இந்த பிரதேசத்தில் நின்றிருந்தார்கள். ஆனாலும் அவர்கள் அந்தப் பிரதேசத்துக்குள்ளேயே காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்கள் இன்று உயிருடன் உள்ளார்களா? இல்லையா? என்பது தெரியாத நிலையிலும், அவர்களைத் தனித்துவமாக மக்களை விட்டு பிரித்தெடுத்துக் கொண்டு சென்றதை கண்கூடாகக் கண்ட சாட்சிகள் பலர் உள்ளனர். பெற்றவர்களால், வாழ்க்கைத் துணைவர்களால் இராணுவத்திடம் கையளித்ததும் இந்த இடத்தில்தான்! ஆனாலும் இதுவரை அவர்களுக்கு என்ன ஆனது என்பது யாரும் அறியாத ஒன்றாகவே இருக்கிறது.

மே 18 ஆம் முள்ளிவாய்க்காலும் என்று அழியாத ரணமாகி, ஈழத் தமிழ் மக்களின் மனங்களில் கிடக்கிறது!



# மகிழ்ச்சியின் திறவுகோல்

மனித மூளை இயல்பாகவே அச்சுறுத்தல் மற்றும் குறைபாடுகள் போன்ற எதிர்மறை விஷயங்களில் கவனத்தைக் குவிக்கும். இதனால் தேவையற்ற கவலை உருவாகி, மகிழ்ச்சி பறிபோகும். ஆனால், சில செயற்பாடுகள் மூலம் அதை மாற்றிவிட முடியும். மனித மூளையில் இரண்டு பயன்முறைகள் உள்ளன.

1. இயல்புநிலை
2. கவனம் குவித்தல்

**இயல்பு நிலை**

50 முதல் 80 வீத நேரத்தை மூளை இயல்பான விஷயங்களுக்குப் பயன்படுத்தும்.

- மனம் அலைபாய்வது.
- தவறுகளையும், அச்சுறுத்தும் விஷயங்களையும் தேடிக்கொண்டே இருப்பது.
- செய்ய இயலாத காரியங்கள் மீது மூர்க்கம்.

**கவனம் குவித்தல்**

- புதிய அல்லது சுவாரஸ்யமான விஷயங்களில் ஈடுபடுவது.
- மகிழ்ச்சியாக இருப்பது.

5-3-2 என்ற திட்டத்தைச் செயற்படுத்தினால் மூளையின் செயற்பாட்டை இயல்புநிலையிலிருந்து கவனம் குவித்தல் நிலைக்கு மாற்ற முடியும்.

5 பேர் ஒவ்வொரு நாளையும் நன்றியுடன் தொடங்குங்கள்!

- காலையில் எழுந்ததும் நீங்கள் நன்றியுடன் நினைவுகூர விரும்பும் ஐந்து பேரின் மீது கவனம் செலுத்துங்கள்.
- அவர்களுக்கு மனதுக்குள்ளேயே நன்றி சொல்லுங்கள்.

**2 விநாடிகள் வித்தியாசமான பார்வை!**

- ஒருவரை எதிர்கொள்ளும்போது 'நீங்கள் நன்றாக இருக்க வேண்டும்' என்று மனதில் வாழ்த்திவிட்டு பேச்சைத் தொடங்குங்கள்.
- உங்கள் மனம் ஒருவரைப் பற்றி எதிர்மறையாக மதிப்பிடுவதற்கு முன்னர், நேர்மறையான கண்ணோட்டத்தை அவர் மீது பதித்துவிடுங்கள்.


**3 நிமிடங்கள் அன்பிருக்கும் இடத்தில் புதுமையைக் கண்டுபிடியுங்கள்**

- ஒருநாள் நிறைவடையும் முன்னர் மனதுக்கு நெருக்கமான, ஆனால் சில மாதங்களாகச் சந்திக்காத நபரைச் சந்தித்து, அவருடன் குறைந்தது 3 நிமிடங்களைச் செலவழியுங்கள்.
- அந்த நபருடன் இயல்பான நட்பை வெளிப்படுத்துங்கள்.
- அவரை மதிப்பிடுவதைத் தவிர்த்துவிட்டு, நட்பை வலுப்படுத்துங்கள்.

இந்தத் திட்டத்தைப் பின்பற்றி மனதின் இயல்புநிலையைத் தொடர்ந்து மாற்றிப் பழகினால், நரம்பியலில் மாற்றங்கள் ஏற்பட்டு, மகிழ்ச்சியைத் தக்கவைத்துக் கொள்ள முடியும். மூளையின் செயற்பாட்டை இயல்புநிலையிலிருந்து கவனம் குவித்தல் நிலைக்கு மாற்ற முடியும்.

## உணவே மருந்து

### நுங்கு




இப்போது நுங்கு தாராளமாகக் கிடைக்கிறது. ஆனாலும் அதன் நன்மைகளை அறியாதவர்களாக நாகரிகம் கருதி மெல்லக் கொல்லும் மென்பானங்களுக்கு அடிமையாகிக் கிடக்கிறோம். இந்தக் கோடை வெயிலில் நுங்கு தரும் நன்மைகளை அனுபவிப்போமா...!

கோடை காலத்தில் பொதுவாக நா வறட்சி, நீர்ச் சத்து குறைபாடு ஏற்படும். இவற்றுக்கு நுங்கு அருமருந்தாகும். அத்துடன் உடலுக்கு குளிர்ச்சியையும் நாவுக்கு சுவையையும் தருவதுடன், நாள் முழுவதும் புத்துணர்வுடன் செயற்படவும் நுங்கு உதவுகிறது.

நுங்கில் விற்றமின் பி, சி, இரும்புச் சத்து, கல்சியம், துத்தநாகம், சோடியம், மக்னீசியம், பொட்டாசியம், தயாமின், அஸ்காரபிக் அமிலம், புரதச் சத்துக்கள் நிறைந்துள்ளன. உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்கள் நுங்கைத் தாராளமாகக் குடிக்கலாம். நுங்கில் அந்துயசைன் என்ற வேதிப் பொருள் பெண்களுக்கு வரும் புற்றுநோய்கட்டிகளை தடுக்கக்கூடியது.

மலச்சிக்கல், வயிற்றுப் போக்குக்கு சிறந்த மருந்து நுங்கு. வெயில் காலத்தில் அம்மை நோய்கள் வருவதைத் தடுக்கும். நுங்கை பானமாக மட்டுமல்ல, உடலுக்கு தேய்த்து குளிப்பதன் மூலம் சருமம் பொலிவடையும்.




# ஜீன்கள் செய்யும் விந்தை...!


சிலர் எப்போதும் ஒல்லியாகவே இருப்பார்கள். கிடைப்பதைச் சாப்பிடுவார்கள் அதுவும் கொஞ்சமாகத்தான் சாப்பிடுவார்கள். அதனால் எடைபோடாமல் நலத்துடன் இருப்பார்கள். அவர்களைப் பார்க்கும் 'கொழுக் மொழுக்' பேர்வழிகளுக்கு வியப்பு உண்டாகும். 'நாங்க எடையைக் குறைக்கப் படாதபாடு படுறோம். சாப்பாட்டைக் கட்டுப்படுத்தணும்னு நினைக்கிறோம். ஆனா முடியலை. இவங்க மட்டும் இயற்கையா டயட்ல இருக்காங்களே... அது எப்படி?' என்ற கேள்விக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் விடை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

'MC4R' என்ற ஜீன்தான் இதற்குக் காரணமாம். பொதுவாக, ஒருவர் உணவை உட்கொள்ளும் போது 'MC4R' என்ற ஜீன் தனது செயலைச் செய்கிறது. 'வயிறு நிரம்பிவிட்டது' என்று சிக்னல் கொடுத்ததும், அவர்கள் சாப்பிடுவதை நிறுத்தி விடுகிறார்கள். ஆனால், சிலரிடம் இந்த 'MC4R' என்ற ஜீன் சரியாகச் செயற்படுவதில்லையாம். அதனால், தாங்கள் முழுக்கச் சாப்பிட்டுவிட்டோம் என்பதை அறியாமல் தொடர்ந்து சாப்பிடுகிறார்கள். உடல் பருமன் பிரச்சினைக்கு ஆளாகிறார்கள்.

வேறு சிலரிடம், இந்த 'MC4R' ஜீன் எப்போதும் தொடர்ந்து செயல்படுகிறது. அதனால், அவர்கள் வயிறு நிரம்பிவிட்டதுபோலவே உணர்கிறார்கள் மேலும் மேலும் சாப்பிடாமல் தங்களைக் காத்துக்கொள்கிறார்கள். ஆக, ஒருவருடைய ஜீன்ஸ் இறுக்கிப் பிடிப்பதற்கும், இன்னொருவரின் ஜீன்ஸ் 'தொளதொள' என்று இருப்பதற்கும் காரணம், ஜீன்கள்தானோ?



# வேட்டையில் மட்டுமல்ல அன்பிலும் அலாதியானவன்



வேங்கைப் புலி - Jaguar

முன் இரு கால்கள் பின் நோக்கி வர, பின் இரு கால்கள் முன் நோக்கிப் பாய்கிற சாதாரண செயல்தான். ஆனால் அந்தச் செயல்தான் சிறுத்தையை மற்ற விலங்குகளிலிருந்து தனித்துக் காட்டுகிறது. புலியை விடவா சிறுத்தை சிறந்தது என்ற கேள்வி எழலாம். திறமைசாலிக்கும், புத்திசாலிக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. புலி பலசாலி, சிறுத்தை திறமைசாலி. சீட்டாக்களுக்கும் , லியோபார்ட்களுக்கும், உருவ ரீதியில் மட்டுமல்ல, இரையைத் தேர்வு செய்யும் விதத்திலும் கூட வித்தியாசங்கள் இருக்கின்றன.

தமிழில் சீட்டா, லியோபார்ட், ஜக்குவார் போன்றவற்றை பொதுவாக சிறுத்தை, சிறுத்தைப்புலி, வேங்கைப்புலி என சொன்னாலும், சிறுத்தை என்கிற பெயருக்குக் கீழேயே இந்த மிருகங்கள் அனைத்தையும் குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது.


வேட்டை என்று வந்துவிட்டால் எதிரிக்குச் சிறுத்தை வருகிற தடமே தெரியாமல் தட்டித் தூக்குகிற வித்தை தெரிந்த உயிரினம். விலங்குகள் உலகில் மணிக்கு 100 / 120 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடக் கூடிய விலங்கு சிறுத்தை. இதேபோல சிறுத்தைப் புலி என அழைக்கப்படும் லியோபார்ட் 88 கிலோமீற்றர் வேகத்திலும், வேங்கைப்புலி எனப்படும் 80 கிலோமீற்றர் வேகத்திலும் ஓடவல்லது. சிங்கம், புலி என இருக்கிற விலங்குகள் பட்டியலில் சிறுத்தைக்கு எவ்வளவு வேண்டுமானாலும் பில்டப் கொடுக்கலாம். ஏனெனில் அது சிறுத்தை.

கால்கள் சிறியதாகவும், மண்டையோடு பெரியதாகவும், உடல் நீளமாகவும் இருக்கும். அதன் மெலிதான கால்கள் மரம் ஏறுவதற்கு ஏதுவாகப் படைக்கப்பட்டிருக்கின்றன. ஜாகுவாரின் உடலில் காணப்படுவதைப் போன்றே சிறுத்தையின் தோலிலும் அடையாளங்கள் காணப்படும். எனினும், சிறுத்தையின் தோலிலுள்ள அடையாளங்கள் மிகவும் சிறியதாகவும் மிகவும் நெருக்கமானதாகவும் இருக்கும். மேலும், ஜாகுவார்களுக்கு உள்ளதைப் போன்று மையத்தில் புள்ளிகளும் காணப்படாது. சூழலுக்குத் தக்க வேட்டையாடும் தன்மைகொண்டது சிறுத்தை. தன் எடைக்கு நிகரான எடையுள்ள விலங்குகளை வேட்டையாடி மரத்துக்கு மேல் எடுத்துச் செல்லும் திறன் கொண்டது.

சீட்டாக்கள் அளவுக்கு லியோபார்ட்களால் வேகமாக ஓட முடியாது. ஆனால், லியோபார்ட்களால் மரம் ஏறிக்கூட தன் இரையை வீழ்த்த முடியும். லியோபார்ட் உருவத்தில் சீட்டாக்களை விடவும் சிறியவை.

சிறுத்தைக்கு வேட்டை மட்டுமல்ல எப்போதாவது அன்பு ததும்பும் சம்பவங்களும் நிகழும். நஷனல் ஜோக்கிரபி தொலைக்காட்சி Eye of the Leopard எனும் பெயரில் சிறுத்தைகள் குறித்த ஆவணப்படத்தைத் தயாரித்தது. சிறுத்தை குறித்த காணொலிகளில் மிக முக்கியமான காணொலி அது. 'கொலை' பசியில் இருக்கும் சிறுத்தை ஒன்று தனியாக இருக்கிற பபூன் ஒன்றை இலக்கு வைத்தது. பார்க்க குரங்கு போல இருக்கிற பபூன் இயல்பிலேயே சாதுவானது. கண்ணிமைக்கும் நேரத்தில் சிறுத்தை பபூனின் கழுத்தைக் கடித்துப் பிடித்துவிட்டது. பொதுவாகச் சிறுத்தை வேட்டையாடிய உணவை மரத்தில் வைத்து உண்ணும் பழக்கம் கொண்டது. அன்றும் அப்படியே வேட்டையாடிய பபூனை கழுத்தைப் பிடித்து மரத்துக்கு இழுத்துச் சென்றது.

மரத்தில் ஏறும் போதுதான் தெரியும், பபூனின் அடிவயிற்றைப் பிடித்தவாறு புதிதாகப் பிறந்த அதன் குட்டி இருக்கும். தாயின் கால்களைப் பிடித்தவாறு குட்டி பபூன் இருக்கச் சிறுத்தை மரம் ஏறிக்கொண்டிருக்கும். தாய் பபூன் ஏறக்குறைய இறந்துவிட்டது. அடுத்த 10 நிமிடங்களில் சிறுத்தைக்கு அது உணவாகவும் மாறி விடும். ஆனால், குட்டியின் நிலை? விலங்குகள் வேட்டையாடுவதில் தாய், குட்டி எனத் தொழில் தர்மங்களைப் பின்பற்றுவதில்லை. பபூனுக்குத்தான் அது குட்டி, சிறுத்தைக்கு அது உணவு. அவ்வளவுதான். தாயோடு சேர்த்து குட்டியையும் சிறுத்தை தூக்கிக் கொண்டு மரம் ஏறும். குட்டிக்கு நடப்பது என்னவென்றே உணர முடியாத சூழல். மரத்தின் கிளையில் பபூனைப் போடும்போதுதான் சிறுத்தை அதனுடைய குட்டியைக் கவனிக்கும். பிறந்த சுவடுகள் கூட மாறாத குட்டி தன்னுடைய தாயை விடாமல் கெட்டியாகப் பிடித்திருக்கும். சிறுத்தை தாய் பபூனைப் போட்ட வேகத்தில் குட்டி மரத்திலிருந்து கீழே விழுந்து விடும்.



சிறுத்தை - cheetah



சிறுத்தைப் புலி - Leopard

சிறுத்தையும் இதற்கு முன்பு இப்படி ஒரு சூழ்நிலையைக் கையாண்டதில்லை. கீழே விழுந்த குட்டியை வாயில் கவ்வியபடி மரத்திற்குக் கொண்டு வரும். குட்டி பபூன் தாய் பபூனை தேடிக் கொண்டேயிருக்கும். சிறுத்தை எப்போதும் வேட்டையாடி மிச்சம் வைத்திருக்கிற உணவைத் திருடி கொண்டு போவதுதான் கழுதை புலிகளுக்கு வேலை. குட்டி பபூன் அதன் கைகளில் சிக்கிவிடக் கூடாது என்பதால் இரவெல்லாம் அதனைப் பாதுகாத்து சிறுத்தை வைத்திருக்கிற காட்சியோடு அந்தக் காணொளி முடிகிறது.

ஒல்லியான உடல்வாகும், திறனும் கொண்டது சிறுத்தையின் உடல். ஒரு மணி நேரத்துக்கு 57 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும். நீச்சலடிக்கும் திறன் உண்டு. மலைகள், மரங்களில் ஏறக்கூடிய திறன் படைத்தது. நீண்ட தூரத்துக்குத் தாவும் இயல்பு கொண்டது. சிறுத்தையின் உடல் நீளத்துக்கு ஏற்றவாறு, அதன் வாலின் நீளமும் அமைந்திருக்கும். வேகமாக ஓடும்போது சட்டென்று திரும்புவதற்கு ஏற்றச் சமநிலையை வால் தருகிறது.

வளர்ந்த சிறுத்தைகள் தனியாக வாழக்கூடியவை. பெண் சிறுத்தை ஒரு பிரசவத்தில் 2 முதல் 5 குட்டிகளைப் பெற்றெடுக்கும். சிறுத்தைக் குட்டியின் வாசனைகூட வெளியில் தெரியாத அளவுக்குத் தடுப்பு வேலிகளைத் தாய் சிறுத்தை அமைக்குமாம். 18 மாதங்கள் முதல் இரண்டு வருடங்களுக்கு பிறகு, தாயிடமிருந்து தனியாக செல்வதற்கு சிறுத்தைக் குட்டி பழகிவிடும். பிற சிறுத்தைக் குட்டிகளுடன் சேர்ந்து திரியும்.

தாய்ப் பூனை தன் குட்டிப் பூனைகளுடன் மெல்லிய உறுமல் ஒலியுடன் பேசும். இதேபோலத்தான் சிறுத்தையும் தன் குட்டிகளுடன் பேசுமாம். ஆறு மாதத்தில் தன் குட்டிக்கு எப்படி வேட்டையாடுவது என்றும், பிற மிருகங்களிடம் இருந்து தப்பிப்பது பற்றியும் தா சிறுத்தை பயிற்சி கொடுக்கும். ஆனாலும் சிறுத்தை அசந்த நேரங்களில் அதன் குட்டிகளை கழுதைப்புலிகள் தூக்கி சென்று உணவாக்கிக் கொள்கிற சம்பவங்களும் அடிக்கடி நிகழு

# சாந்தனின் 'யாழ் - இனிது'


ஈழத்தின் இலக்கிய ஆளுமையான ஐ.சாந்தனின் 'யாழ் இனிது' என்ற புத்தகம் 27 குறுங்கதைகளை உள்ளடக்கியது. எனக்கு மாபெரும் ஆச்சரியத்தை தந்த புத்தகம் இது. காரணம் மிகச் சொற்ப வார்த்தைகளில் கதைகள் சொல்லும் புத்தகம். அதீத அறிவாற்றலின் வெளிப்பாடுதான் சொற்ப சொற்களில் நிறைந்த பொருளையும், வெவ்வேறு தொடர் சிந்தனைகளையும் தரக்கூடிய வல்லமை. அத்தகைய வல்லமை கைவரப் பெற்றது தான் இப்புத்தகம். இதில் மிகவும் கவர்ந்த கதைகளென வசதி, சலுகை, பொடியன், கோலங்கள், பெயர், திருவிலார், பொம்மர், பொறி, உயிர்ப்பு, உறவுகள் ஆயிரம், குயில் வீடு என்பவற்றைப் பட்டியலிடலாம்.




எள்ளலுடன் கூடிய கருத்துத் தெளிப்பு 'சலுகை' என்ற கதை. எனக்குள் ஏற்கனவே சுழன்றுக் கொண்டிருந்த செய்தி என்பதாலோ என்னவோ இக்கதையை மிகவும் ரசித்தேன். அத்தோடு அதிலுள்ள எதார்த்தக் கிண்டல் அருமை. 'திருவிலார்' கதை சட்டென ஒரு சிரிப்பை வரவழைத்து விடக் கூடியது. 'வசதி' என்ற கதையில் என்னதான் இலக்கிய ஆர்வலராக இருந்தாலும் ஏற்றத் தாழ்வை கொண்டாடத் தேவைப்படும் வசதியை குறிப்பிட்டுச் சிந்தனையைத் தூண்டக்கூடியது. 'கோலங்கள்' கதையில் நாலே வரியில் நாட்டு நடப்பைச் சொல்லி விட முடியுமா? என்று வியந்து போனேன்.

இப்படி குறும்பும், எள்ளலும், சமூக சிந்தனைகளும் நூலெங்கும் விரவிக் கிடக்கிறது. கூடவே உணர்வுபூர்வமான கதைகளும் உண்டு. குறிப்பாக 'பொறி', 'உயிர்ப்பு' போன்ற கதைகள் சில நண்பர்களின் வாழ்வை நினைவுக்கு வரவழைத்தது. அவர்களின் மன உணர்வைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது கதை. இக்கதைகளிலிருந்து விடுபடச் சற்று நேரம் ஆனது என்பது உண்மை. குறிப்பாக 'பொறி' கதையில் கடைசியாக வரும் வரிகள் நீங்களெல்லாம் என் பிள்ளைகளாய்க் காணும்... எத்தனை வலி நிறைந்த வரிகள். அத்தோடு அன்றைய சமூகம் தன் பிள்ளைகளாய்க் காணும் மனம் கொண்ட ஆசிரிய பெருமக்களை கொண்டதையும் சொல்கிறது. 'உயிர்ப்பு' கதையிலும் உயிரெனும் அந்த உன்னதச் சொத்தை அவன் எவரிடம் கையளிப்பான்? என்ற சித்திரிப்பு எத்தனை ஆழ்ந்த உணர்வு. இப்படியாக ஒவ்வொரு கதையும் முடிவில் படித்தவரின் உள்ளத்தில் வேறொரு வடிவாய் விரிகிறது.

உறவுகள் ஆயிரம், மகாபாரதம் போல் பல்வேறு கிளைகளாய் விரிகிறது. எனினும் அன்பு கொண்ட நெஞ்சத்திற்கு காண்பவரெல்லாம் உறவு தானே. ரமணன், கீதா, ரஸாக், கபூர், அஞ்ஜனா, லோரன்ஸ் என கதையின் தளமும் அதன் மூலம் விரிகிற காட்சிகளும் சிந்தனையை தூண்டக்கூடியவை. மின்னல் ஒளியென கருத்தை கவர்ந்திடும் செறிவான வரிகள். கதையில் எங்கும் கதை ஆசிரியர் தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்ளவில்லை என்பதே புத்தகத்தின் ஆகப்பெரும் சக்தியாக விளங்குகின்றது எனலாம்.



பனி படர்ந்த அதிகாலை வேளையில்
யாருக்கும் முன்பும்
ஊருக்கும் முன்பும் விடிகிறது
ஒரு தேநீர் கடைக்காரரின் விடியல்

உச்சஸ்த்தாயில் விநாயகனை
வினை தீர்க்க அழைத்து
சடுதியில் ராஜாவின்
மெல்லிசைக்குத் தாவி....
ஒரு பக்கத்தில் பாய்லரும்
மறு பக்கத்தில் பாலும்
ஒரு சேரக் கொதிக்க....
ஒரு துணிப்பை வடிகட்டியில்
தேயிலையைக் கொட்டி
பாய்லருக்குள் பொருத்தி....

கண்ணாடி டம்ளர்களை
கலகலவெனக் கழுவி
சர்க்கரையை ஜதியாய் சேர்த்து....
கொதித்த பாலின் ஆடையை விலக்கி
பாலைச் சிறிதும் தேயிலை நீரை சிறிதுமாய்
சரிவிகிதத்தில் கலந்து....

காற்றினில் ஒரு நிற வானவில்லை
மேலும் கீழுமாய் ஆற்றி
நுரை பொங்கச் சுவை மிஞ்ச
நம் கைகளில் வரும்
தேநீரைப் பருகும் வேளையில்
தொண்டையில் இறங்குகிறது
ஒரு தேநீர் கலைஞனின்
திரவ ஓவியம்.

- க.பிரபுசங்கர்



# கிளாசிக் நாவல் வர வாய்ப்பேயில்லை

## தோப்பில் முஹம்மது மீரான்

**கடற்புர இஸ்லாம் சமூகத்தின் அகவுலகை முதன்முறையாகப் படைப்பாக்கிய முன்னோடி ஆளுமையான தோப்பில் முஹம்மது மீரான் கடந்த 10.05.2019 ஆம் திகதி காலமானார். அவரை நினைவு கூரும்முகமாக கடந்த வருடம் வலைப்பூ ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணல் ஒன்றின் சில பகுதிகள் இங்கு மறுபிரசுரமாகின்றது.**

**மீரானின் 'ஒரு கடலோரக் கிராமத்தின் கதை', 'சாய்வு நாற்காலி, 'கூனன் தோப்பு' ஆகியவை சாதனைப் படைப்புகளாக விளங்குவன. அத்துடன் நாவல் மொழி, கதை சொல்லும் விதம், வடிவ நேர்த்தி என்பவற்றில் தனித்துவம்மிக்கதாகவும் காணப்படுகின்றது.**

**கே:** உங்கள் முதல் நாவல் வெளிவந்தபோது நீங்கள் வேறு எந்த தமிழ்ப் படைப்பையும் வாசித்திருக்கவில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களுக்கான தனித்துவமான மொழியை, கதைசொல்லும் உத்தியை எப்படி வரித்துக்கொண்டீர்கள்?

எங்கள் பகுதி தமிழ்ப் பாரம்பரியம் மிக்கது. தொல்காப்பியத்திலுள்ள பல சொற்கள் இன்றும் அங்கே புழக்கத்தில் இருக்கின்றன. அப்படி இயல்பாக எனக்குள் கூடியிருந்த மொழியைக் கொண்டுதான் எழுதினேன்.

**கே:** உங்கள் நாவல்கள் பல தலைமுறை வாழ்க்கையை, பல்வேறு காலகட்டங்களைப் பேசினாலும் ஒரே ஒரு நாற்காலி, ஒரு தோப்பு, ஒரு தெரு.என ஏதேனும் ஒரு அம்சத்தை மையமாகக் கொண்டிருக்கிறது. ஏன் இப்படி?

நீங்கள் சொல்கிற இந்த விஷயமும் இயல்பாகவே அமைந்ததுதான். நாவல் எழுதிக் கொண்டிருக்கும்போது அது எங்கே முடியுமெனத் தெரியாது. எந்த இடத்தில் முற்றுப்புள்ளி வைக்கத் தோன்றுகிறதோ அங்கே வைத்துவிடுவேன். நீங்கள் சொல்வதுபோல ஒரு மையத்தைப் பிரதானமாகக் கொண்டு எழுத வேண்டுமென்ற திட்டமிடலெல்லாம் கிடையாது. திட்டமிட்டு எழுதினால் ஒருவித செயற்கைத்தன்மை கூடிவிடும். அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு மதத்தின் பெயரால் எப்படி எங்கள் மக்களை ஒடுக்கினார்கள் என்பதைத்தான் 'ஒரு கடலோர கிராமத்தின்

(19ஆம் பக்கம் பார்க்க)




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.



சரவணன் - மீனாட்சி தொடர் மூலம் பிரபலமானவர் நவீன். இவர், 'நட்புன்னா என்னானு தெரியுமா' படத்தில் நாயகனாக நடித்துள்ளார். நாயகியாக ரம்யா நம்பீசன் நடித்துள்ளார்.

புதுமுக நாயகன் என்றுகூட யோசிக்காமல் பல காட்சிகளில் ரம்யா நெருக்கமாக நடித்துள்ளார். இந்தப் படம் இப்போது வெளியாகியுள்ளது.



'நடிகையர் திலகம்' படத்தின் மூலம் மிகப்பெரிய பெயர் பெற்றவர் கீர்த்தி சுரேஷ். இவர் இப்போது பொலிவூட் படம் ஒன்றில் நடிக்கவுள்ளார்.

அஜய் தேவ்கான் ஜோடியாகவே பொலிவூட் படத்தில் நடிக்கவுள்ளார். இந்தப் படம் உதைபந்தாட்ட விளையாட்டை மையமாகக் கொண்டு உருவாகிறது.





அறிமுக இயக்குநர் ஆனந்த் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கிறார் விஷால். இந்தப் படத்திற்கு முதலில் 'இரும்புத்திரை 2' எனப் பெயரிடப்படவிருந்தது. இப்போது வேறு பெயர் சூட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. படத்தின் நாயகியாக ஷ்ரத்தா ஸ்ரீநாத் நடிக்கவுள்ளார்.

விஜயின் அடுத்த படத்தை 'மாநகரம்' படத்தை இயக்கிய லோகேஷ் கனகராஜ் இயக்கவுள்ளார்.

விஜய் தற்போது அட்லீயின் இயக்கத்தில் இன்னமும் பெயரிடப் படாத படத்தில் நடித்து வருகிறார்.

லோகேஷ் இப்போது கார்த்தியை வைத்து "கைதி" படத்தை இயக்கி வருகிறார். இது முடிந்ததும் விஜய் 64 படத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளியாகும்.



ராய் லட்சுமி மாறுபட்ட இரு வேடங்களில் 'சின்ட்ரெல்லா' என்ற படத்தில் நடித்து வருகிறார்.

நாயகியை மையமாகக் கொண்ட இந்தப் படம் நகைச்சுவை, திகில் கலந்த கதையாக உருவாகி வருகிறது.



சிறுத்தை சிவா அஜித்தை வைத்து வீரம், வேதாளம், விவேகம், விஸ்வாசம் என நான்கு படங்களை இயக்கியிருந்தார். இதில் விஸ்வாசம் பெரும் பெயரையும் வசூலையும் பெற்றது.

இந்நிலையில், சிவா சூர்யாவை வைத்து இயக்க வுள்ளார். இந்தப் படத்திலும் நாயகியாக நயன்தாராவை நடிக்க வைக்க முயற்சி செய்கி றார். காரணம், விஸ்வாசம் வெற்றிக்கு நயன்தாராவின் அதிர்ஷ்டமும் என்ற அவரின் நம்பிக்கைதானாம்.

**■ யோகநாராயணன்**

# இலக்கு வைக்கப்படும் பல்கலை. மாணவர்கள்

அண்மையில் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா சில அரசியல்வாதிகள் இன்றுள்ள கொதிநிலையைப் பயன்படுத்தி மாணவர்களைத் தூண்டிவிட்டு அரசியல் நடத்துகின்றனர் எனவும் இப்படியான குழப்பங்கள் ஏற்பட்டாலே இவர்களுக்கு அரசியல் செய்ய முடியுமெனவும் இவர்கள் தங்கள் வீட்டிலோ அல்லது தங்கள் கட்சி காரியாலயங்களிலோ பிரபாகரன், திலீபன் போன்றவர்களின் படங்களை வைத்திருப்பதில்லை எனவும் ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இவர் அடிக்கடி வெளியிடும் உண்மைகளுடன் சம்பந்தப்படாத பொய்மொழிகளை மக்கள் பொருட்படுத்துவதில்லை என்ற போதிலும், இவரின் அறிவிப்புகள் அர்த்தமற்றவை என்று சொல்லி விட முடியாது. இப்படியான ஒரு கருத்தை அவர் வெளியிட்ட அதேவேளையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க போவதாகவும் தெரிவித்தார். உயிர்தெழுகை நாளில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கள் காரணமாக முழுநாடுமே அல்லோலகல்லோலப்படும் நிலையில் ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கான எந்தவித அறிகுறியும் தென்படாத நிலையில் அவர் "ஏனிந்த அறிவிப்பை வெளியிட்டார்" என்ற கேள்வி எழுகிறது.

அரசியல்வாதிகளின் தூண்டுதலின் பேரிலேயே மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் படங்களை வைத்தனர் எனக் கூறுவதன் மூலம் அதற்கு அரசியல் சாயம் பூசி அந்தக் கைதை நியாயப்படுத்த அவர் முயல்வதும் மைத்திரியை ஆதரிக்கப் போவதும் இன்றைய ஆட்சி அதிகாரம் கொண்டவரான மைத்திரிபால சிறிசேனவை குளிர்விக்கும் நோக்கம் கொண்டவையே என்பதில் சந்தேகப்பட இடமிருப்பதாகத் தெரியவில்லை.

இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க மீண்டும் துணை இராணுவக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமெனவும், தற்சமயம் இராணுவம் யாரையாவது கைது செய்தால் 24 மணிநேரமே தடுத்து வைக்க அதிகாரம் விரிவாக்கப்பட வேண்டுமெனவும் கருத்து வெளியிட்டுள்ள நிலையில், டக்ளஸ் தேவானந்தா மைத்திரியை குளிர்வித்து ஓர் அமைச்சுப் பதவியைப் பெற்று விட்டால் போர் முடிவடைந்த நாட்களிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை அவரும் அவரின் தொண்டர்களும் ஆடிய ஆட்டங்களை மீண்டும்



தொடர்வதற்கான ஒரு கனவின் அடிப்படையில் அவர் முயற்சிகளை மேற்கொள்வதாகக் கருத முடியும்.

மாணவர்கள் சில அரசியல்வாதிகளால் தூண்டி விடப்பட்டனர் என்றால் யார் அந்த அரசியல்வாதிகள்? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா? நிச்சயமாக இருக்க முடியாது. பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள் சுமந்திரன், சம்பந்தன் போன்றவர்களைக் கடுமையாக விமர்சிப்பதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முற்றாகவே நிராகரித்து வருகின்றனர். அது மட்டுமன்றி சுமந்திரன் விடுதலைப் புலிகளும் பயங்கரவாதிகள் எனக் கூறியும் போர்க் குற்றம் புரிந்தார்கள் எனக் கூறியும் வாங்கிக் கட்டிக் கொண்டவர். அவர் பிரபாகரன் படத்தை வைக்க ஆலோசனை வழங்கியிருப்பாரா? அப்படி வழங்கினாலும் மாணவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்களா?

அந்தப் படங்கள் பல வருடங்களாக அங்கு ஒட்டப்பட்டிருந்தனவேயொழிய புதிதாக ஒட்டப்பட்டவையல்ல என்பதை அங்கு போய் வரும் எவரும் அறிவார்கள்.

கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்யக்கோரி பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் வடபகுதிக் கட்டளைத் தளபதியிடம் பேச்சுகளை நடத்தியபோது மாணவர்கள் ஏன் அந்தப் படத்தை மறைக்கவில்லை என்று கேள்வி எழுப்பியிருந்தார். பிரபாகரனின் படத்தை ஊடகங்கள் பிரசுரிக்கின்றன. அந்த ஊடகங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. யாழ். மாநகர சபை திலீபனுக்கு நினைவுத் தூபி அமைத்ததுடன் நினைவஞ்சலி நிகழ்ச்சியையும் நடத்தியது. எனினும் யாழ். நகர மேயர் கைது செய்யப்படவில்லை?

அப்படியான நிலையில் பல்கலைக்கழகத்தில் மட்டும் பிரபாகரன், திலீபன் ஆகியோரின் படங்கள் காணப்பட்டமைக்காக ஏன் மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்? அது அரசியல்வாதிகளின் தூண்டுதல் என எப்படி டக்ளஸ் கண்டுபிடித்தார்.

எப்படியிருந்த போதிலும் மாணவர்கள் படையினரால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு மூன்று முக்கிய காரணங்கள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

முதலாவது காரணம் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களின் நினைவஞ்சலி தொடர்பானது. ஒவ்வொரு வருடமும் முள்ளிவாய்க்காலில் நினைவஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது. இதைத் தமிழ் அரசியல் கட்சிகள் தங்கள் நோக்கங்களுக்காக பயன்படுத்துவதைத் தடுத்து உண்மையான மனம் கசிந்துருகி நினைவு கூறும் நிகழ்ச்சியாக நடத்துவதில் பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். எனவே இந்தநாட்களில் மாணவர் அமைப்பின் தலைவர்கள் கைது செய்யப்பட்டமை மாணவர்களை அச்சுறுத்தி நினைவஞ்சலி நிகழ்ச்சியில் அவர்களின் பங்களிப்பை இல்லாமல் செய்யும் நோக்கம் கொண்டதாகக்கருதப்படுகிறது.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் போராட்டங்கள் நடக்காத உயர்கல்வி நிலையங்கள் இல்லை என்று சொல்லுமளவுக்கு நாளாந்த ஆர்ப்பாட்டங்களும் அவற்றின் மீது தடியடி தண்ணீர்ப் புகைப்பிரயோகங்களும் இடம்பெற்று வருகின்றன. அப்பல்கலைக்கழகங்களின் உப வேந்தர்களும், அதிகார பீடங்களும் மாணவர் கோரிக்கைகளுக்கு ஒடுக்குமுறை நடவடிக்கைகளைப் பதிலாக வழங்குவதாலேயே அங்கு சுமுக நிலை காணாமற்போயுள்ளது. ஆனால், யாழ். பல்கலைக்கழகத்தில் எவ்வித குழப்பமின்றிச் சுமுகமாகவே கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையைக் குழப்பும் வகையிலேயே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன எனக் கருதப்படுகிறது.

குறிப்பாகக் கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்கும்படிகோரி மாணவர்கள் ஜனநாயக வழியிலான போராட்டங்களை நடத்தக் கூடும். அதைச் சாட்டாக வைத்து படையினர் மேலும் மாணவர்களைக் கைது செய்யவும் குழப்பங்களை ஏற்படுத்தவும் கூடும். யாழ். பல்கலைக்கழக உபவேந்தரைப் பதவி விலக்கியதும் இந்த நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக இருக்கலாம். இது இரண்டாவது காரணமாகக் கருதப்படுகிறது.

மூன்றாவது பல்கலைக்கழகத்தில் படங்கள் இருந்தமை போன்ற இரு சம்பவங்களை வைத்துக் கொண்டு புலிகள் மீளெழுச்சி பெறுகிறார்கள் எனக் கூறி வடக்கில் இராணுவப் பிரசன்னத்தை நியாயப்படுத்துவதுடன் பாதுகாப்பு என்ற பேரில் இராணுவ முகாம்களை அதிகரிப்பதாகும். இதன் மூலம் வட பகுதியைத் தொடர்ந்து இராணுவ ஒடுக்கு முறைக்குள் வைத்திருப்பதாகும்.

இந்த மூன்று உள்நோக்கங்களும் இல்லாவிடில் தௌபீக் ஜமாத் அமைப்பின் ஆயுதங்களைத் தேட வந்த படையினர் பல வருடங்களாக இருந்த படங்களைக் காரணம் காட்டி மாணவர்களைக் கைது செய்திருக்க வேண்டியதுமில்லை. அவர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க வேண்டியதுமில்லை.

இது முன்னாள் அமைச்சருக்கு விளங்கிக் கொள்ள முடியாத விடயமல்ல. ஆனால் அவர் இவற்றை மறைக்க வெகுசுலபமாகத் தமிழ் அரசியல்வாதிகள் மேல் பழியைப் போட்டு ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்தும் தனது வழமையான பணியைச் செய்துள்ளார் என்பதே யதார்த்தமாகும்.

# புதுவிதி போட்டிச் சிறுகதைகள் - ஓர் இரசனைக் குறிப்பு
# புகழின் 'மௌனமாய் பேசும் வெளி'

■ உடுவில் அரவிந்தன்

இச்சிறுகதையின் தலைப்பே ஒரு கவிதையாகத் தொடங்குகின்றது. அது உள்ளார்ந்த அர்த்தங்களைக் கவனமாக விரிப்பதை வாசகரால் உணரமுடியும். பொதுவாகவே சிறுகதைகளின் வடிவங்கள்குறித்த பரிசோதனைமுயற்சிகள் காலத்துக்குக் காலம் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. அவ்வாறு சிறுகதைகளின் வெளிப்பாட்டுமுறைமைகளில் புதுமைகளைக் காட்டுவது வாசகர்களின் உள்வாங்குந்திறனுக்குச் சவாலாக அமைவதுமுண்டு. ஆனாலும் மையப்புள்ளியிலிருந்து விலகாது, உணர்வுத் தொற்றலை ஏற்படுத்த வல்ல சிறுகதைகள் எவ்வடிவமாயினும் சிறப்பானவையாகக் கருதப்படுகின்றன.

மௌனமாய்ப் பேசும் வெளி மூன்றுகாலங்களை முன்வைத்து நகர்கிறது. போரால் மாற்றுத்திறனாளியான ஒரு பெண் புதுவிதி சிறுகதைப்போட்டிக்கு (பெயரைத் தவிர்த்திருக்கலாம்) எழுதமுயற்சிப்பதைப் போன்ற உத்தியிலே சொல்லப்படுகின்றது. அவள் எழுதுகின்ற சிறுகதை இறந்தகாலத்தின் பதிவாக, விளங்குகின்றது. நிகழ்காலத்தில் அவளும் அறிவழகனும் மட்டுமே வருகின்றனர். இழப்புகளால் ஏற்பட்ட வலிகளைச் சுமந்தபடி அவற்றுக்கு வடிகாலாக எழுத்தைப் பயன்படுத்தும் அவள். அவளை ஆற்றுப் படுத்தக்கூடிய சொற்களைத் திட்டமிட்டு நகர்த்துகின்ற அறிவழகன், இவ்வாறு அகவுணர்வு களின் மூலமாகவும் உரையாடல்கள் வழியாகவும் இருவரையும் ஒரே புள்ளியில் சந்திக்கவைப்பது சிறப்பாகும். அவ்வப்போது வெளிப்படும் கவித்துவமான மொழிநடையும் கதையோட்டத்துக்குத் துணை செய்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாகச் சிறுகதையின் ஆரம்பத்தைச் சொல்லலாம்.

"கந்தகப்புழுதிக்குள் அவர்கள் இரவையும் பகலையும் இழந்தார்கள். வேட்டைக்காரர்களின் துப்பாக்கிக்கும் வேட்டைநாய்களின் மோப்பத்துக்கும் பலியாகிவிடப் போகிறோமோவென்ற பயத்துடன் பலியெடுப்புகளைப் புரிந்துகொண்டு முயல்களைப்போல்ப் பதுங்கியிருந்தார்கள். கடவுளே இல்லை....இல்லை என்று சொல்லிக்கொண்டே வேண்டினார்கள். எப்போது அமைதிபிறக்கும் என்று காத்துக் கொண்டிருந்தார்கள். வெட்டி எறியப்படும் தலைமுடிபோலவோ, நகம்போலவோ அவர்கள் உணர்வற்று இல்லை. அவர்களின் உயிர் எதிலோ அந்தரத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தது" இந்தச் சொற்கள் ஒவ்வொன்றும் யுத்தச்சூழலின் தீவிரத்தை வாசகர்களுக்குக் கடத்துவதில் வெற்றியடைகின்றன.

இக்கதையில் வருகின்ற பெண்பாத்திரத்தினூடாக நூலாசிரியரின் அகநிலை கீழே குறித்தவாறு வெளிப்படுகின்றது.

"....எனக்கு எழுதுவதுதான் நிம்மதி. எழுதித் தீர்க்கமுடியாதுதான் இன்னும் நிறைந்து வழிகின்றது. எல்லாம் வலிகள், காயங்கள் ஆறாதவை. பெண்களும் குழந்தைகளும் ஏன் ஒரு சந்ததியே சீரழிந்த கதை. சிதைந்த உடல், இரத்தம் காணாமல்போன உயிர்...."

ஈழப்போர் பல்வேறு கட்டங்களில் நிகழ்ந்திருக்கிறது. போரின் ஒவ்வொருகட்டத்திலும் சாமானிய மக்களுக்கு அதிகமான இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த வடுக்களுடன் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றோர் ஒருபுறமிருக்க, அதிகமானோர் வலிகளைச் சுமந்துகொண்டு இந்த மண்ணிலேயே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் இறுதிப்போர் அழிவின் உச்சத்தை எட்டியதால் அந்த அவலம் எப்போதுமே கண்களின்முன் நிற்கிறது. மானுடவரலாற்றின் கறைபடிந்த பக்கங்களாகக் கொள்ளத் தக்க இனவழிப்பு இங்கு நடந்திருக்கிறது. அதைப்போன்ற சூழல்களில் வாழ்ந்த படைப்பாளிகள் தங்களுடைய அனுபவங்களைப் பொருத்தமான கலைவடிவங்களில் வெளிக்கொண்டு வரவேண்டியது அவசியமாகும். அவை எழுத்துருக்களாகவோ அல்லது வேறுவகை அளிக்கைகளாகவோ இருக்கலாம். ஆனால் எல்லாமே உயிரோட்டத்துடன் நேர்மையாகப், பதிவுசெய்யப்படவேண்டும். அதுவே அறமெனக் கொள்ளப்படும்.

அந்தவகையில் புகழ் எழுதிய இச்சிறுகதையானது படைப்புமனம் குறித்துச் சில கருத்துகளை அழுத்த மாக முன்வைக்கின்றது எனலாம். இதைப்போன்று பல சிறப்பான சிறுகதைகள் இவரிடமிருந்து கிடைக்குமென்ற நம்பிக்கை வலுப்பெறுகின்றது.

# உண்மையான...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் தலைதூக்கக்கூடிய தீவிரவாதப் போக்கை உத்தேசித்து இத்தடை உத்தரவு வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

பல மணித்தியாலங்களாக நீடித்த வாதப் பிரதிவாதங்களின் பின்னர், முள்ளிவாய்க்கால் தேவாலயத்தினுள்ளே மாத்திரம் மரித்தவர்களுக்காகப் பிரார்த்தனை செய்ய அனுமதித்த 'நல்லாட்சி அரசாங்கம்', கற்பதாகைகள் பொறிக்கப்பட்டிருந்த நிலத்தில் எவ்வித பூஜையையும் செய்ய அனுமதிக்கவில்லை.

இந்த நிலைப்பாடு, கடந்த 2018 ஆம் ஆண்டு வேறொரு விதத்தில் தொடர்ந்தது. கடந்த ஆண்டு மே மாதத்தில், கொழும்பில் இடம்பெற்ற செய்தி மாநாடு ஒன்றில்வைத்து அமைச்சர் ராஜித, 'யுத்த காலகட்டத்தில் பொதுமக்களும்கூட கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் அவர்களை நினைவுகூர இடமளிக்க வேண்டும்' என்றும் தெரிவித்ததைத் தொடர்ந்து தீப்பற்றிக்கொண்ட ஊடகங்கள், சமூக வலைதளங்களினூடாகப் பற்றியெரியத் தொடங்கியிருந்தன.

இந்நிலையில், கடந்த வருடம் மே மாதம் 18 ஆம் திகதி, கடற்கரையில் ஒன்றிணைந்த நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள், கொல்லப் பட்ட தமது உறவுகளை நினைவுகூர்ந்து மெழுகுதிரி ஏற்றிவைத்து அமைதியாகப் பிரார்த்தித்தார்கள். அந்த அமைதியான நினைவேந்தல் நிகழ்வுகளைக் கண்டுகொள்ளாத சிங்களச் சமூக வலைத் தள வீரர்கள், அங்கு இடம்பெற்ற மற்றுமொரு நிகழ்வைக் கண்டு தமது இராணுவத்தின் பெருமைபாடத் தொடங்கினார்கள். அதாவது, மரித்தவர்களை நினைவுகூர வந்த தமிழ் மக்களுக்கு, இலவச குளிர்பானங்களை வழங்கிக் கொண்டிருந்தது ராணுவம். அதைக் கருத்திற்கொண்டு, மீண்டும் இராணுவத்தின் புகழ்பாடி அதை உச்சத்திலேற்றிக் கொண்டாடித் தீர்த்தன சிங்களச் சமூக வலைதளங்கள்.

விடயம் அதுவல்ல. இன்றும்கூட தமிழர்களின் இடங்களைக் கைப்பற்றிக் கொண்டிருக்கும் இராணுவம்... இன்றும்கூட அப்பகுதிகளில் இராணுவ முகாம்களை நிறுவி வரும் இராணுவம்... மரித்தவர்களின் கல்லறைகளையும்கூட புல்டோஸர்களால் அழிக்கும் இராணுவம்... கிளிநொச்சியில் வைத்து இராணுவத்திடம் ஒப்படைத்த தமது உறவுகளைப் பற்றிக் கேட்கும்போதெல்லாம் 'எம்மிடம் அவ்வாறானதொரு பட்டியல் இல்லை' எனக் கூறும் இராணுவம்... உண்மையில் மரித்தவர்களை நினைவுகூர வந்த தமிழ் மக்களுக்கு இவ்வாறாக இலவசக் குளிர்பானங்களை வழங்கியது ஏன்?

கொலை நிலமான முள்ளிவாய்க்காலை நின்னைவுகூர்வதைத் தெற்கிலிருக்கும் சிங்கள மக்களில் அநேகமானவர்கள் எதிர்க்கும்போது, வடக்கின் ராணுவம் நினைவுகூர வருபவர்களுக்கு இலவசக் குளிர்பானங்களை வழங்கியது ஏன்?

சித்திரவதைகளையும் படுகொலைகளையும் முற்றுமுழுதாக எதிர்க்கும் பௌத்த மதத்தை முன்வைத்து, தம்மை நல்லவர்களாகக் காட்டிக்கொள்ள இராணுவம் முயல்வதை, வடக்கில் பரவலாக வைக்கப்பட்டிருக்கும் புத்தர் சிலைகள் மற்றும் பௌத்த விகாரைகளின் மூலமாகக் காணலாம். உண்மையில், இராணுவம் வடக்கில் இன்றும்கூட தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவது இவ்வாறுதான். இராணுவத்தின் அவ்வாறானதோர் ஆதிக்கத்தை நிலைநாட்டும் முயற்சியே இந்த இலவசக் குளிர்பானத் திட்டம். முள்ளிவாய்க்காலில் கைக்குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் கொல்லப்பட்டார்கள். அது இலங்கை ராணுவத்துக்கு நன்றாகத் தெரியும். அந்தக் குற்றவுணர்விலிருந்து விடுபட அது எடுக்கும் முயற்சிகளில் ஒன்றே இவ்வாறான 'நற்சேவை'.

இலங்கையின் சிறுபான்மை இனத்தவர்கள் எப்போதும் ஒன்றை நினைவில் வைத்திருக்க வேண்டும். இலங்கை இராணுவமானது தனது குற்றவுணர்விலிருந்து விடுபட வேண்டிச் செய்யும் இவ்வாறான நற்கருமங்கள், மீண்டும் மீண்டும் வடக்கின் தமிழ் மக்களது சுதந்திரத்தைப் பறிப்பதைத்தான் செய்துகொண்டிருக்கின்றன.

எனவே, தற்போதைய 'நல்லாட்சி' அரசாங்கம் செய்ய வேண்டியதெல்லாம், தமிழர்கள் கூடுமிடங்களிலெல்லாம் இராணுவத்தைக் கொண்டு இலவசக் குளிர்பானங்களைப் பகிர்வதல்லாது, தமிழர்களது இடங்களிலிருந்து இராணுவத்தையும் இராணுவ முகாம்களையும் முற்றுமுழுதாக அகற்றி, அம்மக்களுக்குப் பரிபூரணமான சுதந்திரத்தை வழங்குவதுதான். இறுதி யுத்த காலத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் என்ன நடந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துவதுவும், முள்ளிவாய்க்காலின் அடிப்படை உரிமையை தமிழர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதுவும்தான் உண்மையில் இலங்கையின் சிறந்த நல்லாட்சியாக அமையும்.

நன்றி: தட...ம்

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 78

நன்றி:தமிழ்லீடர்–அவுஸ்ரேலியா

பாம்பு பங்கர்கள் அமைக்கும் பணியில் மட்டுமே களமுனைப் போராளிகள் ஈடுபட்டிருந்தனர். சமரின் ஏனைய திட்டங்கள், நெறிப்படுத்தல்கள் எல்லாமே சிங்காரம் மாஸ்ரரின் சிறப்புப் படையணியின் மூலம் தலைவர் தொலைத்தொடர்பு ஊடாக களமுனையை நேரடியாக வழிநடத்தியிருந்தார். அன்று காலை சிறப்புப் படையணி வந்திறங்கியபோது களமுனைத் தளபதிகள் உட்பட எவருக்குமே ஏன் வந்தார்கள், என்ன செய்யப் போகிறார்கள் என்பது தெரிந்திருக்கவில்லை.

எனினும் ஒருங்கிணைப்புத் தளபதியிடமிருந்து களமுனை அணிகளைத் தயார் நிலையில் வைத்திருக்கும்படி மட்டும் கட்டளை வந்திருந்தது. சிவம், மங்களா, சுகுணன் ஆகியோர் தங்கள் அணிகளைத் தயார் நிலையில் வைத்திருந்தனர். வெள்ளாங்குளம் பக்கமாக வெடியோசைகளும் குண்டுச் சத்தங்களும் கேட்டபொழுது எந்த நிமிடமும் தங்களுக்கு அழைப்பு வரக்கூடும் என அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஆனால், மாலை வரை எந்த ஓர் அழைப்பும் வரவில்லை. சிவத்தினாலோ ஏனைய போராளிகளினாலோ என்ன நடந்தது என்பதை ஊகிக்கமுடியவில்லை.

தாக்குதலில் கலந்துகொண்ட போராளிகளுடன் உரையாடியபோது சிவத்தால் நடந்த விஷயங்களை அறிந்துகொள்ள முடிந்தது. அவர்களுக்குக்கூட களத்தில் இறக்கப்படும் வரை தாங்கள் எங்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்பதே தெரிவிக்கப்படவில்லையாம். மூன்றுமுறிப்பு முகாம் தாக்குதல் பெரும் துரோகத்தால் முறியடிக்கப்பட்ட நிலையில் இத்தாக்குதல் மிகவும் இரகசியமாகப் பேணப்பட்டுள்ளது என்பதைச் சிவம் புரிந்துகொண்டான்.

இப்பெரும் வெற்றி காரணமாக போராளிகள் மத்தியில் எல்லையற்ற மகிழ்ச்சியும் புதிய உற்சாகமும் தோன்றிவிட்டன. எனினும் சிவத்தைப் பொறுத்தவரையில் தான் இப்படி ஒரு தாக்குதலில் பங்குகொள்ள முடியாமல் போனது மனதை நெருடத்தான் செய்தது. சிவம் ஓர் இடத்தில் அமர்ந்திருந்து சட்டைப் பையில் எஞ்சியிருந்த கண்டோசை உரித்து வாயில் போட்டபோது மலையவன் அங்கு வந்து சேர்ந்தான்.

“அண்ணை முள்ளிக்குளத்திலையிருந்து இலுப்பைக்கடவை வரைக்கும் எவ்வளவு சண்டையைப் பிடிச்சிருப்பம்... இப்ப பாத்தியளே... அண்ணை நேரடியாய் நெறிப்படுத் தின சண்டையிலை மட்டும் எங்களை கழிச்சு விட்டிட்டினம்”, என்றான் ஒருவித கொதிப்புடன்.

சிவம், “இல்லையடாப்பா... எங்களுக்கு ஏதோ பெரிய வேலை தரப்போகினம். அதுக்காக ஒய்வு தந்திருக்கினம்”, என்றான்.

மலையவன் அவசரமாக,



“இல்லை... இல்லை... மூண்டுமுறிப்புத் தோல்வியோட அண்ணை எங்களிலை நம்பிக்கை இழந்திட்டார்”, எனக் கொதித்தான்.

“தம்பி, அண்ணை ஒருநாளும் போராளியளிலை நம்பிக்கை இழக்கிறேல்லை. மூண்டுமுறிப்புத் தோல்விக்குக் காரணமான துரோகியைக் கண்டுபிடிக்கும் வரை ஒவ்வொரு விஷயமும் இரகசியமாகவும் எதிர்பாராத விதமாயும்தான் செய்யவேணும். நாங்கள் இஞ்சை ஒய்வெடுக்கிற நேரம், இன்னுமொரு அணி இரகசியமாய் இறங்கித் தாக்குதலை நடத்தேக்கை எதிரிக்குத் தகவல் போக வாய்ப்பில்லை. இந்தக் களத்திலை நாங்கள் மூண்டு அணிகளும் பிரதான தாக்குதல் அணியளாய் இருக்கிற காரணத்தால துரோகி எங்கடை நகர்வுகளைத்தான் அவதானிப்பான்” சிவத்தின் அந்தப் பதிலில் மலையவன் திருப்பதியடைந்திருக்க வேண்டும்.

“இப்பிடி ஒரு பிரச்சினை இருக்கெண்டு நான் நினைக்கேல்லை அண்ணை” என்றான் அவன்.

அந்த இடத்துக்கு மங்களாவும் ரூபாவும் வந்தார்கள். “ஆணும் பெண்ணும் சமம் எண்டு வசனம் பேசுவியள் பொறுத்த நேரத்திலை வழக்கமான ஆம்பிளைப் புத்தியைக் காட்டிப் போடுவியள் என்ன?”, எனச் சிடுசிடுத்தாள் மங்களா.

“ஏன் என்ன நடந்தது?”, எனச் சர்வசாதாரணமாகக் கேட்டான் சிவம்.

“இண்டையான் சண்டையிலை ஒரு பெட்டையைக் கூடிச் சேர்க்கேல்லை! பொம்பிளையள் எண்டால் சக்கட்டையே?”,

சிவம் பெரிதாகச் சிரித்துவிட்டான். பின்பு, “ஐயோ சிங்காரம் மாஸ்ரரின்ரை படையணியிலை மகளிர் இல்லை”, என்றான் அவன்.

“ஏன் எங்களையும் சேர்த்திருக்கலாம்தானே?”, எனப் பாய்ந்து விழுந்தாள்.

சிவம் நிதானமாக நிலைமையை விளங்கப்படுத்தினான். மங்களா சிவம் சொன்னவற்றைக் கேட்டு சமாதானமடைந்த போதிலும், “எல்லாம் சரிதான் ஆனால் எங்களுக்கு எவ்வளவு கவலையாய் இருக்குது தெரியுமே?”, என்றாள்.

மலையவன் கேலியாக, “ரூபாக்கா! நீங்கள் கணேசண்ணையைக் கைவிட்டிட்டு மங்களாக் காட்டை பாரம் குடுங்கோ. குதிக்கவும் கொதிக்கவும் நலல சோடி”, என்றுவிட்டு மங்களாவை விட்டு சற்று விலகி நின்றான்.

“டேய் மலையாண்டி மாமா! எனக்கு மாப்பிள்ளையே தேடுறாய்... நான் உன்னைத்தான் கட்டுறது... கட்டி இருத்தி எழுப்புவன்”, என்றாள்.

“நான் ஒரு பொம்பிளையைத் தான் கட்டுவன்”, என்றுவிட்டு அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டான் மலையவன்.

● ● ●

பல்லவராயன்கட்டில் பரமசிவம் குழுவினர் சமையலை முடிக்க நேரம் நான்கு மணியைத் தாண்டிவிட்டது. அனைவருக்கும் உணவு பரிமாறி முடித்துவிட்டுப் பெண்களும் சாப்பிட ஆரம்பித்தனர். மதிய உணவும் இரவு உணவும் சேர்த்து அந்த இடத்திலேயே சாப்பிட்டு முடிக்கப்பட்டு விட்டது. எஞ்சிய பகுதியை பார்வதி ராமுவுக்கும் வேலுப்பிள்ளையின் இரு பிள்ளைகளுக்கும் கொடுக்கவென எடுத்து மூடி வைத்துக்கொண்டாள்.

அவர்கள் வீதி நிறைந்த சனங்களுக்குள்ளால் வண்டிலையும் லான்ட்மாஸ்டரையும் ஓட்டிவர மிகவும் சிரமப்பட்டனர். அதைவிடப் பின்னால் ஊர்ந்துவரும் உழவுயந்திரங்களுக்கு வழிவிட வேண்டியிருந்தது. நின்றும் மெல்லமெல்ல நகர்ந்தும் பல்லவராயன்கட்டுக்கு வந்துசேர நேரம் இரண்டு மணியைத் தாண்டிவிட்டது.

ஏற்கனவே சுந்தரமும் முத்துவும் வந்து கோவிலடியில் ஓர் இடம் தேட முயற்சித்தபோதும் முடியவில்லை. அந்த இடம் ஏற்கனவே மக்களால் நிரம்பி வழிந்தது. சற்றுத் தொலைவில் நின்ற ஒரு பெரிய பாலை மரத்தின் கீழ் இடத்தைத் தெரிவுசெய்து அதை இருவரும் சுத்தப்படுத்தனர். பெரிய பற்றைகள் எதுவும் இல்லாத போதிலும் செடிகளையும் புற்களையும் செருக்கவேண்டியிருந்தது.

புற்களைச் செருக்கிக் கொண்டிருக்கும்போதுதான் சற்றுத் தொலைவில் ஒரு ஆளுயரத்துக்கு வளர்ந்திருந்த பாம்புப் புற்றை முத்து கவனித்தாள். அவள் சுந்தரத்தை அழைத்து கையை நீட்டி அதைக் காட்டினாள்.

“ஏய் பாம்புக்கு விரல் நீட்டிக் கை காட்டக்கூடாது எண்டு உனக்குத் தெரியாதே?”, எனக் கேலியாகக் கடிந்துகொண்டான் சுந்தரம்.

“அது பாம்பில்லை... பாம்புப் புத்து”, என்றாள் முத்தம்மா.

“பாம்போ... புத்தோ எண்டு இரவுக்கு தலைமாட்டிலை வந்து படமெடுக்கேக்கை தெரியும்”

“ஐயோ அப்ப... வேற இடம் பாப்பம்”, என்றாள் அவள் பயத்துடன்.

“தேவையில்லை நீ எனக்குப் பக்கத்திலை படுத்தியெண்டால் பாம்பு கிட்டவே வராது”, எனச் சிரிப்புடன் சொன்னான் சுந்தரம்.

“அப்பிடியே?”, எனக் கேலியாகக் கேட்டுவிட்டு. “அதிலும் பாக்க நான் பாம்புப் புத்துக்கு மேலையே போய்ப் படுப்பன்”, என்றாள்.

“அப்ப... நான் பாம்பை விட ஆபத்தானவனே?”

“ஆபத்தில்லை...”, என்று இழுத்து கதையை மழுப்பினாள்.

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்




# பாரம் இழுக்கும் பயில்வான்கள்!

காலத்திற்குக் காலம் நம்மை குஷிப்படுத்த, பல விநோத விளையாட்டுக்களை அறிமுகப்படுத்துகிறார்கள். ஒரு ட்ராலியில் பாரமான வொருட்களை வைத்து, அதை நாய்களைக் கொண்டு இழுக்கும் போட்டி இப்பொழுது ரசிகர் பட்டாளத்திடையே பெரும் வரவேற்புப் பெற்றுள்ளது.

பல தொன் எடை கொண்ட செங்கற்கள் அல்லது கொங்கிறீட் துண்டுகளை ட்ராலிக்குள் அடுக்கி வைத்து, அதை 60 விநாடிகளில் 4.5 மீறறர் தூரத்திற்கு இழுத்து வந்து பயில்வான் நாய்கள் சில சாதனையாளராகி இருக்கின்றன. 2017 இல் இங்கிலாந்தில் 68 கிலோ எடை கொண்ட ஒரு நாய், 2,450 கிலோ பாரத்தை இழுத்து மலைக்க வைத்தது.

பல தசாப்தங்களாகத் தொடரும் இவ்வாறான போட்டிகளுக்கு எதிராக மிருக வதைக்கு எதிரான அமைப்புக்கள் போர்க் கொடி தூக்கியிருக்கிறார்கள். ஆனால் இன்னொரு சாரார் இப்போட்டி நாய்களை வலுப்படுத்தும் என்று ஆதரவுக் கரம் நீட்டி வருகிறார்கள்.




# சாக்குப் புரளி

எந்த மூட்டை தெருவில் அநாதரவாகக் கிடந்தாலும், உடனே பொலிஸாருக்கு அறிவித்து விட வேண்டியது, இன்றைய காலததின் கட்டாயம். தொட்டால் பூ மலரும் என்பார்கள். இங்கே தொட்டால் வெடிக்கும் அபாயம். இப்படித்தான் இலங்கை வாழ் நமது சகோதர இனத்தவர் ஒருவர் வைகறைப் பொழுதில், தோளில் ஒரு மூட்டையை தூக்க முடியாமல் தூக்கி கொண்டு தெருவில் போயுள்ளார்.

சந்தியில் நின்ற பொலிஸார் அவரை நிற்கும்படி குறியுள்ளார்கள். ஆனால், அவரோ பொலிஸாரைக் கணடதும் சாக்கு மூட்டையை போட்டுவிட்டு ஓட்டம் எடுத்தார். பொலிஸார் அவரை நோக்கி சுட்டபோதும் காயம் எதுவுமின்றி தப்பித்து விட்டார். பயத்துடனும் எச்சரிக்கையுடனும் சாக்6 அவிழ்த்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சிய உள்ளே இருந்தவை. மூன்று தாராக்களுப் ஒரு கோழியும் இருந்தன. எரிந்த வீட்டில் பிடுங்கியது இலாபம் என்பதுபோல, குன அமளியில் சிலர் இப்படியும் ஆதாயம் தே முற்பட்டுள்ளார்கள்...!





# பனிஸ் திருவிழா...!

உலகில் ஒவ்வொரு விதமான திருவிழாக்கள் நடக்கின்றன. ஹொங்கொங்கில் பணிஸ் திருவிழா நடக்கிறது. 7 நாட்கள் நடைபெறும் இந்தத் திருவிழா கடந்த வாரம் நடந்தது.

செயாங் சவ் (Cheung Chau)தீவில் வருடந்தம் நடக்கும் இந்தத் திருவிழாவில் வெள்ளை நிற இனிப்பு பணிஸ்கள் தாராளமாகக் கிடைக்கும். குழந்தைகளை கடவுளர்கள் போல அலங்கரித்து வீதியுலாவாக அழைத்து வருவார்கள். டிராகன், சிங்கம் எனப் பல்வேறு விதமாக தங்களை அலங்கரித்தபடி மக்கள் அப்பகுதிகளில் வலம் வருவர்.

திருவிழாவின் இறுதியில், பணிஸ்களால் அலங்கரிக் கப்பட்ட 60 அடி கோபுரத்தில் ஏறுவதுடன் நிகழ்வு நிறைவுறும். இந்தக் கோபுரத்தின் உச்சியில் ஏறுபவர்களின் குடும்பம் கடவுளால் ஆசிர்வதிக் கப்படும் என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது.

# பெரிய இடத்து பெயர் விவகாரம்

இங்கிலாந்தில் பொதுவாகவே ராணி குடும்பத்து புதினங்களை பெரிதுபடுத்தி, தினசரிகள் கொட்டை எழுத்துக்களில் அவ்வப்போது பல செய்திகளை பிரசுரிப்பதுண்டு. இளவரசர் ஹரி அமெரிக்க நடிகை ஒருவரை மணந் தாரல்லவா? இப்போது அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்துள்ளது.

இந்தப் பிள்ளைக்கு என்ன பெயர் வைப்பார்கள் என பந்தயம் கட்டுவது மட்டுமின்றி, பல நாளிதழ்களில் ஆராய்ச்சி ரீதியிலான கட்டுரைகளும் தொடர்ந்தன. இப்போது அந்தப் பிள்ளைக்கு 'ஆரச்சி" எனப் பெயரிட் டுள்ளனர். ஆனால், Archie Harrison Mountbatten-இதுதான் பிள்ளையின் முழுப்பெயர். துணிவான என்று பொருள்படும் Archibald என்ற ஜேர்மன் பெயரிலிருந்து ஆர்ச்சி.

இளவரசர் ஹரியின் மகன் என்பதால் ஹரிசன். 93 வயதான ராணியாருக்கு இது எட்டாவது பேரப்பிள்ளை. அரச குடும்பத்தில், இரு நாட்டுக் கலப்பில் வந்த முதல் வரவு இந்தக் குழந்தை என்பதால், முடிக்குரிய ராஜ குடும்பத்தின் 7 ஆவது வாரிசுக்கு "அட்லாண்டிக் சமுத்திரம்" என்நு பெயரிடலாமென ஒருவர் நகைச்சுவையாக குறிப்பிடத் தவறவில்லை. ஆர்தர், எட்வேர்ட், பிலிப்-இந்தப் பெயர்கள் பந்தயத்தில் அகப்பட்டு பிரபல்யமானவை!





# கடுகதியில் அழியும் காடுகள்

இங்கிலாந்தின் விஸ்தீரணத்தை ஒத்தளவு மழைக் காடுகள் 2018 இல் அழிக்கப்பட்டுள்ளன என்ற தகவல் நமக் அதிர்ச்சியை ஊட்டலாம். ஆனால், இது எந்தக் கலப்படமும் இல்லாத உண்மை.

உலகெங்கும் அழிக்கப்படும் காடுகளி அளவை கண்டறியும் வசதி, 2001 இல் செய்மதி மூலம் அறிமுகப்படுத்திய காலம் தொட்டு இன்றுவரையில் கண்டறியப்பட்ட அளவில், இதுவே மிகப் பெரியது. (சுமாராக 120,000 சதுர கிலோமீற்றர்) "குளோபல் வோட்ச்" என்ற அமெரிக்க அமைப்பு கூறியிருக்கின்றது. ப ஆயிரக் கணக்கான வயதுடைய மரங்களு இதில் உள்ளடக்கம்.

கால்நடைகளை வளர்ப்பதற்காகவும், வீடமைப்புத் திட்டங்களுக்காகவும், தொழிற்சாலைகள் நிர்மாணப் பணிகளுக்காகவும் வருடாவருடம் பெருந்தொகை மரங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால், காட்டு மிருகங்களின் தொகையையும் அருகி வருகின்றன.

# ஆரிட்டை சொல்லி அழ?

**இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்**

**அரசன் அண்டு கொல்லுவார் தெய்வம் நிண்டு பேமனன்றாக் கொல்லும் அல்லாஹூ அக்பர்**



செய்யிறதையும் செய்து போட்டுப் பிறகு "சொறி" சொல்லிறது வழக்கமாப் போட்டுது. கால் கை இடிபட்டுப்போச்சுது. இல்லாட்டி சாமான் கை தவறி விழுந்து போச்சுது. இல்லாட்டி ஏதாச்சும் சின்னச் சின்ன விசியம் நடந்துபோச்சுது. தெரியாமல் நடந்திட்டுது. பரவாயில்லை. தெரியாமல் செய்ததுதானே. வேணுமெண்டு செய்யேல்லைத்தானே! எண்டு சொறி சொல்லலாம்.

ஆனால் ஒருதன்ரை வாழ்க்கையை அழிச்சுப்போட்டு இல்லாட்டி அழிக்கிற மாதிரியான வேலையை செய்துபோட்டுப் பிறகு சொறி சொல்லாப்பிடாது. முப்பது வருசமா எங்கடை சனத்தைப் போட்டு வாட்டி வதைச்சுப்போட்டு கடைசியா முள்ளி வாய்க்காலிலை கொண்டு போய் ஒரு இலட்சம் சனத்தைச் சாக்காட்டிப் போட்டு பிறகு அது செய்யிறம் இது செய்யிறம் எண்டு எங்களைப் பேய்க்காட்டிப் போட்டுக் கடைசியாச் செய்தது என்ன?

கிளி நொச்சிக்கு வந்த பிரதமர் ரணில் ஏதாச்சும் புதுசாச் சொல்லி தங்கடை உறவுகளைத் தேடுற சனத்துக்கு ஆறுதல் சொல்லுவர் எண்டு பாத்தால்...! "நடந்ததைக் கனவெண்டு நினைச்சு மறப்போம் மன்னிப்போம்" எண்டு சொல்லிச் சனத்திட்டை திட்டு வாங்கிக் கொண்டு போனவர். அதுக்குப் பிறகு சனம் அதைத் திரும்பத் திரும்பச் சொல்லி அவரைத் திட்டாத நாளில்லை. "என்ன நெஞ்சழுத்தம் இருந்தால் இவ்வளவு காலத்துக்குப் பிறகும் "எக்ஸ்கியூஸ் மீ" எண்டு சொல்லுவர்? அவற்றை தடிப்புத் தானே? எண்டு சனம் சொல்லி ஆறேல்லை.

அதுக்கை உந்தக் குண்டு வெடிப்பு வந்து எல்லாத்தையும் கெடுத்துப் போட்டுது. சனம் செத்தது ஒரு பக்கம். காயப்பட்டது மட்டுமில்லை எத்தினை பேருக்கு மன உளைச்சல் துவங்கிவிட்டுது தெரியுமே? இப்ப முஸ்லிம் மௌலவிமார் நாலைஞ்சு பேர் சேந்துகொண்டு பௌத்த குருமார் கொஞ்சப்பேரையும்,

ஐயர்மார் கொஞ்சப்பேரையும், சுவாமி மார் கொஞ்சப்பேரையும், பாதர்மார் கொஞ்சப் பேரையும், கூப்பிட்டுக் கூட்டம் வைச்சு இனங்களுக்கிடையிலை சமாதானம் வேணும். சண்டை சச்சரவு இருக்கப்பிடாது. நாங்கள் ஒற்றுமையா இருக்க வேணும். எண்டு ஒரே ஆரவாரம். இப்பிடிப் பல கதையள் கதைக்கினம்.

கண்கெட்டாப் பிறகு சூரிய நமஸ்காரம் எண்ட மாதிரி. எல்லாம் நடந்து முடிஞ்சாப் பிறகுதான் ஒற்றுமையா இருக்க வேணும் எண்ட ஞானம் பிறக்கிது. தமிழ் சனம் பலகாலம் கஷ்டப்படேக்கை அவையும் மனுசர்கள். அவைக்கும் சமாதனமா இருக்க விருப்பம் இருக்குதெண்டு உந்த மௌலவியள் யோசிச்சவையோ?

செத்தது முஸ்லிம் ஆக்கள் இல்லைத்தானே? அதாலை வலு லேசாச் சொறி சொல்லலாம். இண்டைக்கு தேவாலயங்களிலை குண்டு வைச்ச மாதிரி ஆரேன் பள்ளியளிலை குண்டு வைச்சு முஸ்லிம் ஆக்கள் செத்திருந்தால்...? என்ன நடந்திருக்கும். போறவாற பஸ்ஸைக் கொளுத்தி,வானைக் கொளுத்தி. என்ரை ஐயோ பையோ எண்டு கத்திக் குளறி.. பழைய ரயர் ரியூப்பை றோட்டுக்குக் குறுக்கை போட்டு வெள்ளிக் கிழமை தொழுதிட்டு ஏதாவது குழப்பம் செய்து எண்டு என்ன ஆட்டம் ஆடி இருப்பினம்? இது செத்தது தமிழ் கிறிஸ்தவர்கள் எண்டதாலை சமாதானம் பேசினம்? .

இந்தப் பெரிய பிரச்சினையைச் செய்துபோட்டு "மறப்போம். மன்னிப்போம்" எண்ட கதை எதுக்கு? சரி குண்டு வைச்சியள். வைச்சதுக்குரிய காரணம் என்ன? சொல்லுங்கோ பாப்பம். என்ன குறை உங்களுக்கு இருக்குதெண்டு கேக்கிறன்? எல்லாப் பள்ளிவழியவும் வாள் வாளா வைச்சிருக்கிறியள். கேட்டால் பாதுகாப்புக்குத்தான் வைச்சிருக்கிறம் எண்டு சொல்லுறியள். வாள் வெட்டுக் கொம்பனியள் கனக்க இருக்கிற யாழ்ப்பாணத்திலை வாளின்ரை படம் வைச்சிருந்தாலே குற்றம் எண்டு பொலிஸ் பிடிக்கிறவை. அப்ப நீங்கள் வீட்டுக்குவீடு வாள் வைச்சிருந்திருக்கிறியள். உது ஞாயமோ? நான் நினைக்கிறன் உந்த வாளுக்கப் பின்னாலை ஒரு இரகசியம் இருக்கமெண்டு. ஏனெண்டால் சோழியன் குடும்பி சும்மா ஆடாது. என்ன விளங்கிதோ? அப்ப உந்த வாள் கொண்டு வந்தது ஒண்டில் நீங்கள் ஆரையும் வெட்டுறதுக்கு. இல்லாட்டி வெட்டுற ஆக்களுக்கு விக்கிறதுக்கு எண்டு நாங்கள் நினைச்சால் அது பிழை இல்லை ஏனெண்டால் உங்களுக்கு எப்பவும், எதிலையும் வியாபாரந் தான் முக்கியம் எண்டது என்ரை விளக்கம்.

முள்ளிவாய்க்காலிலை லட்சம் சனத்துக்கு மேலை செத்துப்போய் ஊரெல்லாம் சோகமா இருக்கேக்கை ஆமியோடை சேந்து பால் சோறு காச்சித் திண்டனியள் எல்லே? அவையளோடை சேந்து தமிழன்ரை தோல்வியை வெடியும் கொளுத்திக் கொண்டாடினதை தமிழ் சனத்தாலை மறக்கேலுமோ? இப்ப என்ன நடக்கிது? அதே ஆக்கள் உங்களை என்ன செய்யினம்? இப்ப ஆரோடை சேந்து பால்சோறு காச்சி விளையாடப்போறியள்?

என்ன நடந்தாலும் நீங்கள் திருந்தமாட்டியள். கடவுள் கன தூரத்திலை இல்லை. உங்கை கிட்ட இருக்கிறார். இப்ப பத்து வருசத்துக்கு முன்னம் தமிழாக்களுக்கு வைச்ச ஆப்பு. அதுக்குப் பிறகு இப்ப இதோடை மூண்டு தரம் திருப்பி உங்களுக்கே வைபட்டிட்டுது எண்டுதான் நினக்கிறன். எப்பவும் கடவுள் பெரியவன்தான். அரசன் அண்டு கொல்லுவர். தெய்வம் நிண்டு பேமனன்றாக் கொல்லுவர். அல்லாஹூ அக்பர்.

- கோளரங்கன்

## கிளாசிக்....

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

கதை' நாவலில் சொல்லியிருக்கிறேன். உண்மையாக நடந்த விஷயங்கள்தான். • பொருளாதாரரீதியில் ஒடுக்கப்பட்ட ஜனங்கள் குறித்து 'துறைமுகம்' நாவலில் எழுதினேன். கருவாடு வியாபாரம் செய்த என் தகப்பனார் இப்படியாக ஒடுக்கப்பட்ட ஆள்தான். 'கூனன் தோப்பு' நாவலில் மீனவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அடிக்கடி நடந்துகொண்டிருக்கும் பிரச்சினையை எழுதினேன். பாரம்பரியமான ஒரு குடும்பம் எப்படி பொருளாதார ரீதியில் வீழ்ச்சியுறுகிறது என்பதை 'சாய்வு நாற்காலி' நாவலில் காட்டுகிறேன். நாகர்கோவிலில் நான் தங்கியிருந்த தெரு குறித்து 'அஞ்சுவண்ணம் தெரு' நாவலில் எழுதினேன். போர்ச்சுக்கீசியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நடந்த போர் குறித்ததுதான் எனது சமீபத்திய நாவல் 'குடியேற்றம்'.

**கே:** இந்த நாவலுக்காக மட்டும்தான் நான் கொஞ்சம் ஆய்வுசெய்தேன். பிற நாவல்களெல்லாம் நான் கண்டதும் கேட்டதும்தான்.

**ஏன் உங்கள் அனுபவத்துக்கு மீறிய விஷயங்களை எழுத வேண்டுமென்று தோன்றவில்லை?**

இன்னொருவரைப் போல எழுத வேண்டுமென்றோ இடங்களையும் தளங்களையும் மாற்றி எழுதிப்பார்க்க வேண்டுமென்றோ நான் ஒருபோதும் நினைத்தது கிடையாது. எனக்குத் தெரிந்த விஷயங்களை, தெரிந்த மொழியில், தெரிந்தபடி எழுதுவதுதான் எனது பாணி.

**கே: நீங்கள் எழுத வேண்டுமென நினைப்பதையெல்லாம் எழுத முடிகிறதா?**

இல்லை. சாதியம் ஒரு தடையாக இருக்கிறது. எனக்கு மீனவ சமுதாயமும், நாடார் சமுதாயமும் மிகவும் தெரிந்தவை. நாடார் சமூகம் குறித்து ஒரு நாவல் எழுதி வைத்திருக்கிறேன். ஆனால், வெளியிடத் தயாராகயில்லை. சாதி, மதக் குளறுபடிகளால் இங்கே ஒரு கிளாசிக் நாவல் வர வாய்ப்பேயில்லை என்றுதான் தோன்றுகிறது.

இவ்வளவு கெடுபிடிகளுக்குள்ளேயே இயங்க வேண்டியிருக்கிறது.

**கே: இத்தனை ஆண்டுகால எழுத்து வாழ்க்கை உங்களுக்குத் திருப்தி அளிப்பதாக இருக்கிறதா?**

நான் எழுதியதில் எனக்கு முழு திருப்தி. ஆனால், பொருளாதாரரீதியான தேவைக்கு எழுத்து எனக்கு எதுவும் செய்ததில்லை. கிட்டத்தட்ட 22 புத்தகங்கள் எழுதியிருக்கிறேன். சில புத்தகங்கள் ஒரு லட்சம் பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன. சமீபத்தில் வெளியான 'குடியேற்றம்' நாவல் தவிர மற்ற எல்லா நாவல்களுக்கும் விருதுகள் கிடைத்திருக்கின்றன. ஆனால், விருதுத் தொகையைத் தவிர பதிப்பாளர்களி டமிருந்து பெரிதாக எதுவும் வந்ததில்லை. எழுத்தாளர்களைப் பதிப்பாளர்கள் சுரண்டுகிறார்கள். ஒரு பெருநாளின்போது செலவுக்குப் பணம் இல்லை. எனது தமிழ், மலையாளப் பதிப்பாளர்கள் எல்லோருக்கும் எழுதினேன். காலச்சுவடு தவிர வேறு எந்தப் பதிப்பகமும் பதில் எழுதவில்லை. வாழ்க்கை ஒரு மாதிரியாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால், அதற்கெல்லாம் சோர்ந்துவிடுவதில்லை. எழுதி முடிக்கும்போது பிரசவம் முடிந்ததுபோல, இமயமலையிலிருந்து இறங்கியதுபோல ஒரு திருப்தி கிடைக்கும். அது போதும்.

## நான் யார்.....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் காணியின் முன்னாள் குடியிருப்பாளர் மூலமாகத் தெரிந்து கொண்டு காணியை விட்டுவிடுமாறு எச்சரிக்கை செய்யவே அங்கு அழைத்திருந்தனர்.

"இங்குள்ள மக்கள் நல்லபிப்பிராயத்துடன் இல்லை. அவர்கள் பயப்படுகிறார்கள்" என்றுதான் தேவாலய பிதா பேச்சைத் தொடங்கினார்.

"இங்குள்ள மக்கள் யாருமே என்னையோ எங்கள் நிறுவனத்தையோ இன்னும் அறியவில்லை. நாங்கள் இன்னும் அந்த இடத்திற்கு உத்தியோகபூர்வமாக வரவில்லை. காணியை வாங்கி மட்டும்தான் இருக்கிறோம். அதற்குள் எப்படிப் பொதுமக்களுக்கு ஒரு அபிப்பிராயத்துக்கு வரமுடியும்" என்று கேட்டேன்.

உடனே "நீ முஸ்லிம்" என்றார் தேவாலய பிதா. அமைதியையும், சமாதானத்தையும் வலியுறுத்தும் செயற்பாடுகளால் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையால் ஈர்க்கப்பட்டிருந்த எனக்கு இது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. குண்டு வெடிப்பு நிகழ்ந்த மற்றொரு நகரான மட்டக்களப்பில் "பயங்கரவாதிகளையும் அவர் குடும்பங்களையும் மன்னித்துவிட்டதாக" பேராயர் நடத்திய பிரசங்கத்தின் பின்னால் இருக்கும் வலி, சமூக நல்லிணக்க உணர்வு என்பவற்றுக்கு முன்னால் இந்த நடத்துகை அநீதியாகத் தோன்றியது. இப்படி நடத்தப்படுவதற்கு நான் எந்த வகையிலும் பொருத்தப்பாடானவளாக இல்லாத நிலையில் அங்கே ஒரு குற்றவாளியாக நிறுத்தப்பட்டேன். எவ்வளவு சமாதானமான நியாயமான விடயங்களை முன்வைத்தும் பிதா எதையும் உள்வாங்கவே இல்லை. அவர் திரும்பத் திரும்பச் சொன்னதெல்லாம், "நீ முஸ்லிம். இப்படித்தான் அந்த சென்டர் இந்த சென்டர் என்று துவங்குவீர்கள். நாங்கள்தான் செய்திகளில் பார்த்தோமே, பள்ளிகளிலேயே ஆயுதங்களை ஒழித்து வைத்திருப்பவர்கள் நீங்கள். உங்களுடைய சேவையோ செயற்பாடோ எங்களுக்குத் தேவையில்லை. எங்கள் மக்களுக்கான சமூக அபிவிருத்திப் பணிகளை நாங்கள் முன்னெடுப்போம். நீ ஏதாவது நல்லது செய்ய விரும்பினால், முஸ்லிம் சமூகத்துக்குப் போய் செய். குண்டுகளோடு குதிக்க இருப்பவர்களுக்கு உள ஆலோசனை வழங்கித் திருத்து. மீறி இங்கு வந்தால், பௌத்த பிக்குவையும் இணைத்துக் கொண்டு மக்கள் போராட்டத்தை முன்னெடுப்போம்" என்று உறுதிபடக் கூறினார்.

பொலிஸ் நிலையத்தில் இப்படி அச்சுறுத்தப்படவில்லை. ஆனால் இங்கு வருவது பாதுகாப்பில்லை. மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்று வலியுறுத்திக் கூறினார்கள்.

இவர்கள் 'மக்கள்' என்று யாரைக் கூறுகிறார்கள் என்பது எனக்குப் புரியவேயில்லை. அந்த ஊரில் எந்த மக்களுக்கும் என்னைத் தெரியாது. ஆக இந்த முடிவுகள் அனைத்தும் சில தனிநபர்களின் விருப்பத்திற்கு அமைவாகவே எடுக்கப்பட்டிருக்கின்றன.

2012 இல் முஸ்லிம் அடிப்படைவாதிகளால் உயிரச்சுறுத்தலை எதிர்கொண்டு கைக்குழந்தையுடன் இந்த நாட்டை விட்டே செல்லும்படியான நிலைக்குத் தள்ளப்பட்டேன். 'உம்மத்' நாவல் வெளியானவுடன் 2014 இல் மீண்டும் என் மீது கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இவையெல்லாம் நடந்தும், எனது சொந்த ஊருக்கு 9 ஆண்டுகளாகச் செல்ல முடியாத சூழ்நிலையிருந்தும் நாட்டுக்குத் திரும்பி வந்தேன். இந்த நாட்டின் மீது எனக்கிருந்த நேசம், நம்பிக்கை தவிர வேறு எதன் பொருட்டும் நான் இத் தீர்மானத்தை எடுக்கவில்லை. இஸ்லாமியக் கலாசாரக் காவலர்களின் கண்காணிப்பில் இருந்து தள்ளியிருக்கும் பொருட்டு சுமார் 16 ஆண்டுகள் வாழ்ந்து பழகிய முஸ்லிம்கள் அதிகம் வாழும் தெஹிவளைப் பகுதியை விட்டு ஸ்ரீஜயவர்த்தன பகுதியில் குடியேறினேன். அவ்வளவு தூரம் சிங்கள மக்களில் எனக்கு நல்லபிப்பிராயமும் நட்பும் இருந்தது. இன்னும் இருக்கிறது.

முஸ்லிம் சமூகம் என்னை இஸ்லாமிய விரோதியாக நோக்குகிறது. சிங்கள சமூகம் இஸ்லாமியத் தீவிரவாதியாக சித்தரிக்க முற்படுகின்றது. இந்த நாட்டில் பாதுகாப்பாக கௌரவமாக வாழ முடியுமா என்ற கேள்வி திரும்பவும் திரும்பவும் மேலெழுந்து வந்து கடுமையாக வேதனை செய்கின்றது.

நாட்டின் எதிர்காலத்தை உறுதியற்றதாகவும் தனிமனிதர்களின் எதிர்காலத்தைப் பயத்தின் பிடியில் வைத்திருக்கவும் அதிகார சக்திகள் விரும்புகின்றன. இதன் மூலமாக அரசியல் இலாபமடைவதே அதிகார சக்திகளின் விருப்பம். இந்நாட்டின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் இதற்கான சான்றுகளை நிறையவே காணலாம். இனவாதம், மதவாதம் இரண்டுமே பல்வேறு காரணிகளின் நிமித்தம் தனிநபர்களின் தீர்மானங்களின்படி நாட்டைப் பிடித்தாட்டுகின்றன. இந்நாட்டினுடைய ஒரு பிரஜையாக எனக்கிருந்த பெருமிதங்கள், நம்பிக்கைகள், பாதுகாப்புணர்வு அனைத்துமே **கேள்விக்குள்ளாகியிருக்கும் ஒரு சூழலில் இருந்தே இதனை எழுதுகிறேன்.**

# வாரபலன்

### மேடம்

குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். மகிழ்ச்சி தாண்டவமாடும். குழந்தைகளால் பெருமை அடைவீர்கள். பொருளாதார நிலை சீராக இருக்கும். உத்தியோகஸ்தர்களுகள் நன்மை அடைவர். வியாபாரிகளுக்கு குறைந்த லாபமே கிடைக்கும். விவசாயிகள் கூடுதல் லாபம் பெறுவீர்கள்.

### ரிஷபம்

குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். பணவரவு நன்றாக இருக்கும். அதேசமயம் புதிய முதலீடுகளில் ஈடுபட வேண்டாம். சமூகத்தில் செல்வாக்கு வளரும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். உத்தியோகஸ்தர்கள் பணிகளில் கவனம் செலுத்தவும். வியாபாரிகள் கடனை வசூலிப்பதில் அக்கறை காட்டவும்.

### மிதுனம்

பணிகளைச் செய்து முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படும் புனிதப் பயணங்களை மேற்கொள்வீர்கள். நண்பர்கள் மற்றும் உற்றார் உறவினர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தவறானவர்களின் தொடர்புகளைத் தவிர்ப்பது நலம்.

### கடகம்

தற்போதைய சூழ்நிலைகளில் சிறிய மாற்றங்களைக் காண்பீர்கள். மனதில் புதிய நம்பிக்கைகள் பளிச்சிடும். உயர்ந்த எண்ணங்களால் சிறப்படைவீர்கள். திட்டமிட்ட பணிகளைச் சாதுர்யத்துடன் முடிப்பீர்கள்.

### சிம்மம்

பொருளாதார நிலை சீராகும். ஆரோக்கியத்தில் முன் னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் நிலவும் குழப்பங்கள் அகலும். வெளிநாட்டுத் தொடர்புகள் நன்மை தரும். உத்தியோகஸ்தர்களுக்குச் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு இருக்கும்.

### கன்னி

உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். பொருளாதாரம் மந்த நிலை காணும். வெளியூர் தொடர்புகளைப் பேணி நன்மை பெறறலாம்.உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த ஊதியத்தையும் பெறுவீர்கள். வியாபாரிகள் புதிய முதலீடுகளிலும் ஈடுபடலாம்.

### துலாம்

கவலைகள் வந்து போகும். உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருப்பது நலம்.உடன் பிறந்தோர் வகையில் நிலவி வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். பொருளாதா ரத்தில் படிப்படியான முன்னேற்றம் தென்படும். உத்தியோகஸ்தர்களுக்கு நிம்மதி ஏற்படும்.

### விருச்சிகம்

தொழிலில் லாபம் ஏற்ற இறக்கமாகவே வரும். சுபச் செய்திகள் தேடிவரும். குடும்பத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு. பணவரவுக்கு எந்தக் குறையும் இருக்காது. வியாபாரிகள் துணிந்து முதலீடுகளைச் செய்வார்கள்.

### தனுசு

சமூகத்தில் மதிப்பு மரியாதை கூடும், ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். பேசும்போது வார்த்தைகளில் கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகஸ்தர்களுக்கு பிரச்னைகள் குறையும். வியாபாரிகள் பொறுமையுடன் செயல்படவும்.

### மகரம்


உங்கள் பேச்சுக்கு மதிப்பு அதிகரிக்கும். பணவரவு கூடும். புதிய திட்டங்களால் பயனடைவீர்கள். உறவினர்கள் ஆதரவுக் கரம் நீட்டுவர். தீயோர் நட்பினால் பணவிரயம் , கௌரவக் குறைச்சல் உண்டாக வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்கவும்.

### கும்பம்

குடும்பத்தில் சந்தோஷம் பெருகும். மதிப்பு மரியாதை கூடும். எடுத்த காரியங்கள் அனைத்தையும் குறித்த காலத்திற்குள் முடிப்பீர்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். சிந்தனைகளில் தெளிவு உண்டாகும். நெடுநாளைய ஆசை ஒன்று பூர்த்தியாகும்.

### மீனம்

எண்ணங்கள் அனைத்தும் ஈடேறும். தெய்வ வழிபாட்டில் மனம் ஈடுபடும். பண வசதி சரளமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேன்மையடையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். உறவினர்கள் சுமுகமாகப் பழகுவார்கள்.



# அஞ்சலோட்டம்

சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளனத்தினால் World Relay Championships போட்டிகள் 2014 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் 2014, 2015, 2017 ஆம் ஆண்டுகளில் இந்தத் தொடர் பஹாமஸ் நாட்டில் தொடர்ச்சியாக மூன்று தடவைகள் நடத்தப்பட்டன. இதன் நான்காவது தொடர் ஜப்பானின் யோகோகமா நகரில் கடந்த 11, 12 ஆம் திகதிகளில் நடைபெற்றன.

இப்போட்டிகள் அடுத்த வருட ஒலிம்பிக் போட்டிகளுக்கான முன்னாயத்தமாகவே கருதப்பட்டன. அஞ்சலோட்ட நிகழ்வில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 4x100 மீற்றர், 4x200 மீற்றர், 4x400 மீற்றர் போட்டிகளோடு கலப்பு அஞ்சலோட்டப் போட்டியாக 4 x 400 மீற்றர், 2x2x400 மீற்றர் மற்றும் தடைதாண்டி அஞ்சலோட்டமும் நடைபெற்றன. இதில் 2x2x400 மீற்றர் மற்றும் தடைதாண்டி அஞ்சலோட்டம் ஆகியவை ஏற்கனவே நடைபெற்று வந்த 4x800 மீற்றர் போட்டிக்குப் பதிலாக முதன்முறையாக இம்முறையே அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் 4x100 மீற்றர் போட்டியில் பிறேசிலும் 4x200 மீற்றர் போட்டியில் அமெரிக்காவும், 4x400 மீற்றர் போட்டியில் ரினிடாட் அண்ட் ரொபாகோவும் தங்கப்பதக்கத்தை வென்றன. அதுபோல பெண்கள் பிரிவில் 4x100 மீற்றர் போட்டியில் அமெரிக்காவும் 4x200 மீற்றர் போட்டியில் பிரான்சும், 4x400 மீற்றர் போட்டியில் போலந்தும் தங்கப்பதக்கத்தை வென்றன. கலப்பு அஞ்சலோட்டப் போட்டிகளிலும் தடை தாண்டி அஞ்சலோட்டப் போட்டியிலும் அமெரிக்கா தங்கப்பதக்கம் வென்றது.



# கிண்ணம் தக்கவைப்பு

பிறீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் சம்பியன் பட்டத்தை மன்செஸ்ரர் சிற்றி 4ஆவது தடவையாகக் கைப்பற்றியுள்ளது. இறுதி லீக் போட்டிக்கு முன்னதாக மன்செஸ்ரர் சிற்றி மற்றும் லிவர்பூல் அணிகளுக்கிடையில் ஒருபுள்ளி வித்தியாசமே இருந்த நிலையில் இறுதிப்போட்டியில் வெற்றி பெறும் அணி சம்பியன் பட்டத்தை வெல்வதற்கான வாய்ப்பிருந்தது. அதன்பிரகாரம் இரண்டு அணிகளும் வெற்றி பெற்றாலும் ஒரு புள்ளியால் மன்செஸ்ரர் சிற்றி சம்பியனானது.

சென்ற பருவகாலத்திலும் சம்பியன் பட்டம் வென்ற மன்செஸ்ரர் சிற்றி தற்போது அதனைத் தக்கவைத்துள்ளது. இதன்மூலம் 2008 / 09 பருவகாலத்தில் சம்பியன் பட்டத்தை தக்கவைத்த மன்செஸ்ரர் யுனைற்றட்டுக்குப் பிறகு மன்செஸ்ரர் சிற்றி தற்போது சம்பியன் பட்டத்தை தக்கவைத்துள்ளது. அத்தோடு சேர் அலெக்ஸ் பேர்குசன், ஜோஸ் மௌறின்கோ ஆகியவர்களுக்குப் பிறகு சம்பியன் பட்டத்தை தக்கவைத்த அணி முகாமையாளர் என்ற பெருமையையும் மன்செஸ்ரர் சிற்றி முகாமையாளரான பெப் கார்டியாலோ பெற்றுள்ளார்.

இம்முறை நடைபெற்ற 38 போட்டிகளில் 32 போட்டிகளில் வென்றதன் மூலம் மன்செஸ்ரர் சிற்றி சென்ற பருவகாலத்தில் 32 போட்டிகளில் வெற்றி பெற்ற தமது சாதனையை சமப்படுத்தியுள்ளது. மன்செஸ்ரர் சிற்றியை தவிர பிறீமியர் லீக் தொடரில் அதிகபட்சமாக மன்செஸ்ரர் யுனைற்றட் 15 தடவைகளும் செல்சி 5 தடவைகளும் சம்பியன் பட்டம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நான்கு சதங்கள்



கடந்த வருட இறுதியில் பங்களாதேஷில் நடைபெற்ற பங்களாதேஷ் – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடரில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய சாய் ஹோப் தொடர்ச்சியாக இரண்டு சதங்கள் அடித்தமை ரசிகர்களுக்கு நினைவிருக்கலாம். ஆனாலும் அதனைத் தொடர்ந்து கடந்த பெப்ரவரி மாதம் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற இங்கிலாந்துடனான ஒருநாள் தொடரில் சாய் ஹோப் விளையாடி இருந்தாலும் அவர் மூன்றாமிடத்திலேயே களமிறக்கப்பட்டிருந்தார்.

இந்தத் தொடரில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கிறிஸ் கெயிலும் ஜோன் கம்பலும் களமிறங்கி இருந்தார்கள். இந்நிலையில் அயர்லாந்தில் நடைபெற்று முடிந்த முத்தரப்புத் தொடரில் சாய் ஹோப் மீண்டும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி அயர்லாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கெதிராகத் தொடர்ச்சியாக 2 சதங்களை அடித்ததன் மூலம் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகத் தொடர்ச்சியாக 4 சதங்களை அடித்த வீரர் என்ற உலக சாதனையைப் படைத்துள்ளார். இதற்கு முன்னதாக சயீட் அன்வர், ஹேர்சல் கிப்ஸ், குயின்ரன் டீகொக், பெயார்ஸ்ரோ ஆகியோர் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி தொடர்ச்சியாக 3 சதங்கள் அடித்தமையே சாதனையாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

# இம்முறை சவாலே!

ரென்னிஸில் செம்மண் ஆடுகளப் போட்டிகளைப் பொறுத்தவரை முடிசூடா மன்னனாகத் திகழ்பவர் ஸ்பெயினின் ரபெல் நடால். அவர் இதுவரை பெற்ற 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களில் 11 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் செம்மண் ஆடுகளமான பிரெஞ் ஓப்பன் தொடரில் பெற்றமையே அதனை உறுதிப்படுத்துகின்றன. அந்தவகையில் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தாண்டுக்கான பிரெஞ் ஓப்பன் தொடரில் அவரால் கிண்ணம் வெல்லமுடியுமா என்ற சந்தேகம் தற்போது ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் கடந்த ஒரு மாத காலத்தினுள் நடைபெற்று முடிந்த மூன்று செம்மண் ஆடுகளத் தொடர்களிலும் அவரால் கிண்ணம் வெல்ல முடியாமல் அரையிறுதிப் போட்டிகளுடனேயே வெளியேறியுள்ளார்.

அந்தவகையில் மட்ரிட் ஓப்பன் தொடரில் ஸ்ரெபனோஸ் சிற்சிபஸிடமும் மொன்ரி கார்லோ மாஸ்ரர்ஸ் தொடரில் பபியோ போக்னியிடமும் பார்சிலோனா ஓப்பன் தொடரில் டொமினிக் தீமிடமும் அடைந்த தோல்வியே இவ்வாறு சிந்திக்க வைத்துள்ளது. அத்தோடு தற்போது ரென்னிஸ் தரவரிசைப்பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் ஜோகோவிச் இறுதியாக நடைபெற்ற மட்ரிட் ஓப்பன் தொடரில் சம்பியன் பட்டத்தை வென்றதோடு 3 வருடங்களாக செம்மண் ஆடுகளத்தில் விளையாடாத றோஜர் பெடரரும் இந்தத் தொடர் மூலம் தனது மீள்வருகையை நிகழ்த்தியுள்ள நிலையில் பிரெஞ் ஓப்பன் தொடரை நடால் இம்முறை வெல்வது இலகுவானதாகத் தோன்றவில்லை.





# பின்னடைவு

பார்சிலோனா மற்றும் உருகுவே அணிகளின் வீரரான லூயிஸ் சுவாரஸ் கடந்தவாரம் முழங்காலில் மேற்கொண்ட சத்திரசிகிச்சை காரணமாக 4 – 6 வாரங்கள் போட்டிகள் எதிலும் கலந்து கொள்ள மாட்டாரென பார்சிலோனா அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. இதனால் எதிர்வரும் 25ஆம் திகதி பார்சிலோனா – வலென்சியா அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள கோபா டெல் ரே இறுதிப்போட்டியில் அவர் விளையாடாதது பார்சிலோனா அணிக்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. அது மாத்திரமல்லாமல் லாலிகா தொடரின் இறுதி இரண்டு போட்டிகளிலும் சுவாரஸ் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனாலும் லாலிகா தொடரை ஏற்கனவே பார்சிலோனா கைப்பற்றியதனால் சுவாரஸின் விலகல் தாக்கத்தைச் செலுத்தாது எனலாம்.

அதுபோலவே அடுத்த மாதம் பிறேசிலில் ஆரம்பமாகவுள்ள கோபா அமெரிக்கா உதைபந்தாட்டத் தொடரிலும் உருகுவே சார்பில் சுவாரஸால் விளையாட முடியுமா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. இத்தொடரில் உருகுவே தனது முதல் போட்டியில் ஈக்குவடோரை ஜுன் 16 ஆம் திகதி சந்திக்கின்றது. இந்தப் போட்டியில் பெரும்பாலும் சுவாரஸால் விளையாட முடியாது என்றே கருதப்படுகின்றது. ஆனாலும் ஜுன் 20 ஆம் திகதி நடைபெறும் ஜப்பானுடனான போட்டியிலும் ஜுன் 24 ஆம் திகதி நடைபெறும் சிலியுடனான போட்டியிலும் சுவாரஸ் விளையாடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 18.05.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.